# திராவிடநாடு

மலர் 14 | விலை 2 அணா | இதழ் 6



முகப்பில்......

## டேவிட் மார்ஷல்

விடுதலைக் கிளர்ச்சிகளுக்குத் தம்மை அர்ப்பணிப்பதன் மூலம், அரசியல் வானில் புதிய தாரகைகளாகிவிடுவோர் பட்டியலில், இப்போது டேவிட்மார்ஷல் என்பாரும் சேர்ந்திருக்கிறார். வயது 46! பிறவியில் யூதர்!! தலைமை வகிப்பதோ, சிங்கப்பூருக்கு!!! சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்பெயின் நாட்டுச் சர்க்காரால் யூதர்கள் என்ற காரணத்துக்காக விரட்டப்பட்டு, சிங்கப்பூருக்கு வந்தவர்களின், வழிவந்தவர் மார்ஷல். வாழ்க்கையின் அரும்புப் பருவத்தில், தாண்டிச்செல்ல நேர்ந்த தடைகள் பலவாம் இவருக்கு! கத்தோலிக்க கிருத்துவர் பள்ளியில் படிக்கச் சென்றபோது, யூதர்களின் பண்டிகையில் கலந்துகொண்டார் என்ற காரணத்துக்காக வெளியேற்றப்பட்டாராம்!! பிறகு, எப்படியோ கல்வி கற்று, பள்ளியைவிட்டு வெளியேறியதும் ஒரு கடையில் விற்பனையாளராக அமர்ந்தாராம்— பெல்ஜியத்துக்குப்போய், நெசவுத் தொழில் துறையில் பயிற்சிபெற்று வந்து ஒரு வர்த்தகக் கழகத்தின காரியதரிசியாக இருந்தாராம். அதுமட்டுமின்றி, மார்ஷல் பிரெஞ்சு மொழி கற்பிக்கும் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்! வாழ்க்கையில், காதல் குறுக்கிட்டது— காசோ, கையிலில்லை; எனவே, நாடோறும் உழைத்து ஒரு பைசா கூட வீணாக்காது சேர்த்துத் திருமணம் செய்துகொண்ட இவர் 1934ல் இங்கிலாந்துக்குச் சென்று வக்கில் தொழிலுக்குப் படித்து 1937-ல் சிங்கபூருக்கு வந்து வக்கில் தொழிலைத் துவங்கும்போது, இரண்டாவது உலகப் போர் மூளவே 1942ல் ஜப்பானியர்களால் சிறையில் பூட்டப்பட்டார்! பிறகு 1945-ல் தான் நேச நாட்டினரால் விடுவிக்கப்பட்டார். எப்போதும் பொது இயக்கங்களில் பற்றும் பாசமும்கொண்ட மார்ஷலின் புகழ் 1951ல் ஒரு கொலை வழக்கின்போது சிங்கப்பூர் முழுமைக்கும் அறிமுகமாயிற்றாம்!! ஒரு 13 வயதுப் பெண்ணை வாலிபன் ஒருவன் கொலை செய்ததாகக் குற்றச்சாட்டு. மார்ஷல் ஆஜராகி வாலிபனை விடுவித்தார்! அந்த வழக்கின் விளைவாக, மார்ஷல், பெரிய வக்கிலானார்— வருமானம் குவிந்தது. வருமானத்தையும் வக்கில் தொழிலையுமே சதமென நினைத்து, வாடாத் திருமேனியாகாமல், மலேயா விடுதலைப் போரில் அவர் ஈடுபட்டு அண்மையில் (ஏப்ரல் 7-ந் தேதி) முதலமைச்சராகவும் ஆகியிருக்கிறார்! அவர்சார்ந்திருப்பது, பிரபுக்களின் கூடாரமல்ல—கட்சியின் பெயரோ தொழிற்கட்சி. அதனால், அவரும் அவரது சகாக்களும் அபரிமிதமான வெற்றியைப் பெற்று சிங்கப்பூரில் மந்திரி சபையை அமைத்தார்கள்! அந்த மந்திரிசபை 'நித்யகண்டம் பூரணாயுசு' எனும் நிலையிலே இருந்து வருகிறதென்றாலும், இரண்டு வாரங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் காரணமாக, தன்னுடைய பெயரைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது.

எவ்வளவுதான் 'ஜினிவா'க்கள் நடைபெற்றாலும், மேற்கத்திய வல்லரசுகளின் காலனி ஆதிபத்யம் மட்டும் இன்னும் ஒழிந்தபாடில்லை. உலகத் தலைவர்களாகிவிட்டாலே வாயால் சமாதானம் பேசிக்கொண்டு, நாடுகளைக் கைப்பிடிக்குள் வைத்திருக்கும் 'நேருக்குணம்' வளரும்போலும்! கிழமாகிவிட்டதென்று கருதப்படும் பிரிட்டனுக்கு இன்னும் ஆதிக்க ஆசை விட்டபாடில்லை எனபதற்கு அறிகுறியாக ஆசிய மண்ணில் இருப்பது, மலேயாவும் சிங்கப்பூருமாகும். தீவிரவாதிகளை வேட்டையாடியும், பிறரை வசப்படுத்தியும் வாழும் முயற்சியைச் செய்துவருகிறது பிரிட்டன்! 'அது கூடாது; எமக்கு சுயாட்சி வேண்டும்' என்று மார்ஷல் ஒரு தீர்மானம் கொண்டுவந்து சிங்கப்பூர் சட்டசபையில், ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறார். இது கண்டு, இங்கிலாந்து, புருவத்தை உயர்த்த ஆரம்பித்திருக்கிறது. சிங்கப்பூரில் பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருக்கும் கவர்னருக்கும், மார்ஷலுக்கும், 'நான்கு உதவி மந்திரிகளை' நியமிப்பதுகுறித்து ஏற்பட்ட தகராறே இந்த முடிவுக்குக் காரணமாகும். சிங்கைத் தீவில், பல்வேறு அரசியல் கட்சிகளுண்டு—வாலிபர் லிக்வான்யீ என்பவரைத் தலைமையாகக்கொண்ட தீவிரக் கட்சியும் இருக்கிறது. என்றாலும், உலகின் கவனத்தை இப்போது கவர்ந்திருப்பது, மார்ஷல்தான்! அதற்குக் காரணம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு 'தாசனா'வதைப் பெரும் பாக்கியம் எனக் கருதாமல், விடுதலை வீரனாகத் தோள்தட்டிக் கிளம்பியதுதான்! மார்ஷலின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று எல்லோரும் கூர்ந்து கவனித்தாலும், விடுதலை வீரர்களின் பட்டியலில் அவரும் இடம்பெற்றுவிட்டார், இப்போது! காரணம், பார்-அட்-லா ஆனோம்; பெரிய வக்கிலானோம், வாக்கு சாதுர்யம் பெற்றோம் அதைக்கொண்டு வளமான வாழ்வு பெற்றோம், அது போதும்—என்றெண்ணாது, மக்களின் விடுதலைப் போரில் மனம் துணிந்து இறங்கியதுதான்.

இத்தகைய 'மனஉறுதி'கொள்ள வேண்டியவர்கள் எத்தனையோபேர் எடுபிடிகளாகயிருந்துவிட்டால் போதும் — ஓடும் தண்ணீரில் ஒரு துளி நாக்கில்பட்டால் அதுவே பாக்கியம் என்ற எண்ணத்துடன் நமதரும் திராவிடத்திலே இருக்கிறார்கள்! அவர்களுக்கு, இந்த இதழின் முகப்பை அலங்கரிக்கும் மார்ஷலை அறிமுகப்படுத்த விரும்புகிறோம்—திராவிடத்தின் விடுதலைக்கும் பல தரப்பட்டோர் முன்வர வேண்டும் எனும் வேட்கையால்.

★

'எழுச்சிப் பண்'
ஆசிரியர்: அடைக்கலம்
பாடியவர்: கா, வே. முருகேசன்
விலை அணா 3
கமிஷன் 25%
சபாபதி பதிப்பகம்
67, வாணிகர் வீதி, காஞ்சி.

"புகழ்க்கன்னி"
கவிஞர் சாமி. பழனியப்பன்.
விலை ரூ 1-8-0
எளிய நடையில் தமிழ் கொஞ்சும் சிந்தனைக் கவிதைகள். தேன் சொட்டும் உவமைகள் நிரம்பியிருக்கிறது, இந்த ஏட்டில்.

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

காஞ்சி] 14—8—55 [ஞாயிறு

# கண்ணீர் வெற்றி!

நான்கு மனைவிமார்கள் அனுமதிக்கப் பட்டிருக்கிறது, இஸ்லாத்தின்படி.

எனினும் இப்போது பாகிஸ்தானில், இரண்டு பெண்டாட்டிக்காரர் பாடு திண்டாட்டமாகிவிட்டிருக்கிறது.

எத்தனையோ பெண்கள் வடித்த கண்ணீரெல்லாம், கூரிய வாளாகி, இப்போது அறப்போரில் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் முதலமைச்சராக இருந்து, இப்போது வெளியே அனுப்பப்பட்ட முகமதலி, வேறு எந்த நன்மையைச் செய்யாவிட்டாலும், தன் இரண்டாம் கல்யாணத்தின் மூலம், பாகிஸ்தானில், மாதர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடும் பக்குவம் பெறச் செய்துவிட்டார்.

முகமதலியின் முதல் மனைவியின் கண்ணீர், பாகிஸ்தானில், மாதர்களின் உள்ளத்திலே ஒரு புயலையே உண்டாக்கிவிட்டது.

ஒவ்வொரு ஆடவனும் அச்சத்துடன்தான், வீட்டுக்குள் நுழைய வேண்டும்—குத்தல், கிண்டல், தூற்றல், சாபம், சரமாரியாகக் கிளம்பிவிட்டது,

"பாவிக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?"

"வாலிபம் திரும்புகிறதோ?"

"பீகம் என்ன அழகில் குறைவா, அந்தஸ்தில் குறைவா, அறிவில்தான் மட்டமா? அனியாயக்காரப்பாவி, அந்த உத்தமி அழ அழ, வேறோர் சிறுக்கியைத் தேடிக்கொண்டானுமே"

"ஆண் பிள்ளைகளின் துடுக்குத்தனமே இதுதானே! நாம் தான் அவர்கள்மேல் பிராணனை வைத்துக் கொண்டிருப்பது; சேவை செய்வது; காதலிப்பது, எல்லாம்; அவர்கள், எங்கே எவள் கிடைப்பாளோ என்று தேடிக்கொண்டு திரிகிறார்கள்."

"யார் கேட்க முடியும் என்ற தைரியம்"

"நாமெல்லாம் வாயில்லாப் பூச்சிகள்!"

"கொட்டினால்தானே தேள்! கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி"

"பாவம்! பீகத்துக்கு மணிமணியாகப் பிள்ளைகள்; சீமையிலே படிக்கிறார்கள்"

"இந்தப் 'புதுசு' அமெரிக்கச் சீமையாமே!"

"ஆமாமாம், அவருக்குப் பெட்டி படுக்கை தூக்கிக்கொண்டு பின்னோடு திரிந்தது."

"அவரிடம் வேலைபார்த்துக் கொண்டிருந்ததாமே."

"ஆமாம், வேலைபார்க்கத்தான் வந்தாள், பலே கைகாரி, முகமதலியைக் கைக்குள்ளே போட்டுக்கொண்டாள். குடும்பம் கதறுகிறது. பீகம் வெளியே வருவதே இல்லை"

"கேட்டாயா, இந்த அனியாயத்தை, பீகம் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருக்கும்போது, இந்தப் புது மாப்பிள்ளை, அந்தப் பொம்மைக்கு விருந்துவைத்து, சிரித்துப்பேசி மகிழ்ந்தாராம்"

"கொரானிலே இடம் இருக்கிறதாம்—ஒண்ணு போதாதென்றால் நாலு வேண்டுமானாலும் 'நிக்கா' செய்துகொள்ள."

"அடே அப்பா! கொரானிலே உள்ளதை அப்படியே பின்பற்றுகிறவர்களா இவர்கள் — அதிலே தங்களுக்குச் சாதகம் கிடைக்கிறது என்ற உடன் 'கொரான்' என்கிறார்கள். அதிலே கூறப்பட்டுள்ள சன்மார்க்கத்தின்படியா இவர்கள் வாழ்க்கை இருக்கிறது"

"கொரானில் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, குடும்பம் கோவென அழும்போது இந்தக் கொடுமை செய்யலாமா?"

"செய்யலாமா என்று 'படுதா'வுக்குள்ளே இருந்துகொண்டு கேட்டால் போதுமா! வாடி, ஜெபினுசா! குலாபி, நீயும்வா! ஷம்ஷத் பேகம் வீட்டுக்குப் போகலாம், அங்கே கூட்டம் நடக்கப்போகிறது"

"சும்மா விடக்கூடாது. இந்த முகமதலியைப் பார்த்து, எல்லா ஆண்களுமே, புதுசு புதுசாகத் தேட ஆரம்பித்துவிடுவார்கள்."

"இரண்டாந்தாரமே கூடாது."

"ஆமாம், கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும்,"

"இப்படிப்பட்டவர்களுக்குப் பட்டம், பதவி கொடுத்தால், பாகிஸ்தான் பாதகஸ்தானாகிவிடும்."

"ஆமாம், அரசியலிலே இருந்தே விரட்ட வேண்டும்."

பாகிஸ்தானில் ஒவ்வோர் 'மக்கானிலும்' இப்படி ஒரு 'ஜிக்காத்' ஆரம்பமாயிற்று.

முகமதலி இப்போது விரண்டோடுவதற்கு இது முக்கியமான காரணம் என்கிறார்கள்.

இது ஓரளவுக்குப் பாகிஸ்தான் மாதர்களுக்கு மகிழ்ச்சி அளித்தாலும் அவர்கள், உண்மையான மகிழ்ச்சி, இருதார மணத்தை ஒழித்துக் கட்டுவதிலேதான் பெறமுடியும் என்று நம்பி, அதற்காகக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

இஸ்லாத்தின் மூலாதாரக் கோட்பாட்டுக்கு உகந்தவகையில், மாதர்களுக்கு அவர்களுக்கு உரிய இடத்தைச் சமூகத்தில் பெறச் செய்வதற்கு ஏற்றவகையில், முஸ்லீம் திருமண முறை, குடும்ப அமைப்பு ஆகியவற்றில் சட்டபூர்வமான மாறுதல் ஏதேனும் செய்யவேண்டுமா என்பதுபற்றி ஆராய ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு, இருக்கிறது.

முகமதலி பதவிலிருந்து விடைபெற்றுக்கொள்வதற்குமுன்பு; ஆகஸ்ட் 5ந்தேதி இந்தக் கமிஷனை அமைத்துவிட்டார்.

இந்தக் கமிஷனில் மூன்று பெண்களும் உளர்.

ஆறு மாதத்தில், இந்தக் கமிஷன் இது சம்பந்தமாக அறிக்கை வெளியிடும்.

'முகமதலிக்கு, பாரிஸ் பயணம் ஏற்பாடாவதாகத் தெரிகிறது! நல்ல நகைச்சுவை மிகுந்தவரின் யோசனையாகத்தானே, இது இருந்திருக்க வேண்டும்!

பாகிஸ்தானில், இஸ்லாம் பேசி, மாதரின் உரிமையைப் பறிக்க எண்ணும் செயல் இனி நடவாதபடி, இந்தக் கமிஷன் ஆய்வுரை அளிக்கும் என்று நம்புகிறோம்.

மாதர் குலத்தின் உள்ளத்தை வாட்டிய முகமதலிகள், ஆடவரின் இதயத்தை வாட்டி வதைக்கும் வேட்டைக்காரிகள், வேல் விழியால் விலாப்புறத்தைக் குத்தும் உல்லாசபுரி என்று கூறப்படும் பாரிசில் சென்று பார்க்கட்டும்.

பாகிஸ்தான் மாதர் கிளர்ச்சி பலனளிக்கத் துவங்கியிருப்பது கண்டு மகிழ்கிறோம்.

★



# ஆலையில்லா ஊரில்.........

தம்பி,

நீ மிகவும் பொல்லாதவன்! ஒரு பெரிய 'போராட்டம்' உருவாகிக் கொண்டிருக்கும்போது சும்மா இருந்தாய்—சரி, ஒரு சமயம் திகைப்பினால் அவ்விதம் இருக்கிறாய் என்று எண்ணிக்கொள்வோம்—போராட்டம் முடிந்து, அதன் 'பலாபலன்' பற்றிய கணக்குப் பார்க்கும் இந்தக் கட்டத்திலாவது, உன் கருத்துரையைக் கூறுவாய் என்று எண்ணினேன்—நீயோ அப்படி ஒரு போராட்டம் நடந்ததாகவே கவனிக்க மறுக்கிறாய்....மிகப் பொல்லாதவன்!!

உனக்குத் தெரியுமா? நாம், அந்தப் போராட்டத்திலே கலந்து கொள்ளாததால், நம்மைக் 'கோழைகள்' என்று ஏசுகிறார்கள்!!

என்னடா தம்பி, சிரிக்கிறாய். இது என்ன புதிதா! கோழைகள் என்ற வார்த்தைகளைவிட மிகமிகக் கேவலமான, நஞ்சு கலந்த நிந்தனைகளை எல்லாம் கேட்டிருக்கிறோமே, இது எம்மாத்திரம், என்கிறாய், போலும்.

உண்மைதான், நமது கழகத் தோழர்கள் பக்குவப்பட்டுவிட்டார்கள்!!

சிறுசொல் கேட்டுச் சீறும் கட்டம், கண்டனம் கேட்டுக் குமுறும் கட்டம், போய்விட்டது.

நாம் பதில் கூறவேண்டியது நமது நெஞ்சுக்குத்தான், நம்மை வஞ்சகர் என்று கூறிடும் போக்கினருக்கு அல்ல! உடலில் காய்ச்சல் இருக்கிறதா இல்லையா என்பதை அறிய, நாம் நமது உடலைத்தான் பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, அடுப்படியைத் தொட்டுப்பார்த்துமல்ல, ஐஸ்கட்டியைத் தொட்டுப்பார்த்துமல்ல.

கோழைகள்!! நாம்!!

தடியுடன் உள்ள போலீஸ்காரர்கள், சிரிப்பார்கள்!

சிறை அதிகாரிகள் சிரிப்பார்கள்!

நாம் பெற்ற தியாகத் தழும்புகளுக்கு முடியுமானால், அவை இடிஇடியெனச் சிரித்து, அவர்களைப் பார்த்து ஏளனம் செய்யும்!!

தம்பி, காங்கிரஸ்காரர்கள் தண்டவாளப் பெயர்ப்பு, தபாலாபீஸ் கொளுத்துதல் போன்ற முறையில் ஆகஸ்ட்டுப் போராட்டம் நடத்தினர் 1942ல்! நாம் கலந்துகொள்ளவில்லை. நாம் என்றால் தம்பி, நானும் நீயும் மட்டுமல்ல—தி. க. தி. மு. க. என்றுள்ள இரண்டும் ஒன்றாக இருந்ததே, அந்தக் குடும்பம் பூராவும். நாம் பயங்கொள்ளிகள், அடக்கு முறைக்குப் பயந்து ஓடிவிட்டோம், என்று பொருள்! அந்த முறைகள் சரியல்ல என்று மனதார நம்பினோம்—வீணான கலகம் கலவரம் குழப்பம் பொருட்சேதம், இவைதான் மிச்சம் என்று எண்ணினோம் எனவே ஒதுங்கிநின்றோம். அது போலத்தான் இப்போது, கொடி கொளுத்தும் காரியத்தில் தி.மு.க. கலந்து கொள்ளவில்லை—இது கோழைத்தனம் என்று கூறுவது எந்த வகையில் பொருந்தும்.

வேண்டுமானால், தமிழ் நாட்டு அரசியலில் இது வாடிக்கை—ஒருவர் மற்றவருடைய கருத்தை அறியும் அளவுக்குக்கூட பாசம் நேசம் கொள்ளாமல் ஒரு திட்டம் தீட்டிவிட்டு அதன் காரணமாக அதிலே கலந்துகொள்ள மறுப்பவர்களைக் கோழைகள் என்று ஏசுவது தமிழகத்தின் வாடிக்கை, என்று கொள்ள வேண்டியதுதான்! தங்கள் ஆகஸ்ட்டில் சேராததற்காகக் காங்கிரஸ்காரர்கள் திராவிடரைக் கோழைகள் என்று ஏசினர்! இப்போது, நடைபெறும் கிளர்ச்சிகளில் கொடி கொளுத்துவதில் மட்டுமல்ல, எந்தப் போராட்டத்திலாயினும் சரி, நாம் சேராமலிருந்தால், கோழைகள் என்று ஏசுகிறார்கள்! இது பொருளுள்ளது என்று கருதமுடியுமா! நீண்ட காலமாக இருந்துவரும் வாடிக்கை—பழக்கம் — என்றுதான் கொள்ள வேண்டும்.

நமக்கென்று ஒரு அமைப்பு இருக்கிறது, நாம் கூடிக் கலந்து பேசிச் சில பல கிளர்ச்சிகள் நடத்தியுமிருக்கிறோம், இனியும் நடத்துவதற்கான முயற்சி இருந்து வருகிறது, இதை எல்லாம் கவனிக்காமல், அவரவர்கள் துவக்கும் கிளர்ச்சிகளில் நாம்கலந்துகொள்ள வேண்டுமென்று கூறுவதும், கலந்துகொள்ளாதபோது கண்டிப்பதும், ஏன் என்று யோசித்ததுண்டா, தம்பி! நாம், அவ்வளவு அருமையாகப் பணியாற்றக் கூடிய பக்குவம், பயிற்சி, திறம்படைத்தவர்கள் என்ற எண்ணம், எல்லா முகாமிலும், இருக்கிறது—எனவே எல்லோர் கண்ணும் நம்மீது விழுகிறது என்று பொருள்!

ஆமாம், தம்பி, எவ்வளவு கடுமையான கிளர்ச்சிக்கும் ஈடுகொடுக்கக் கூடியவர்கள் என்பதை மும்முனைப் போர் நன்றாக எடுத்துக் காட்டிவிட்டது — எனவேதான், யார் எத்தகைய போராட்டம் துவக்கினாலும், நாம் வரவேண்டும் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்—ஆவல் அதிகமாகி, அது நிறைவேறாதபோது கோபம் அதிகமாகிறது — கண்டனம் வீசுகிறார்கள்! வேறென்ன!

பிறர் மனம் மகிழும்படி நடந்து கொள்வது நல்லதுதான்—பண்பு கூடத்தான் அது—ஆனால் தன்மானம் என்ற ஒன்றும் இருக்கிறதே, ஒரு அமைப்பின் தன்மானம், அது அழைக்கப்பட்டது, அதைக் கலந்து திட்டம் தீட்டப்பட்டது என்ற நிலைமை இருந்தாலல்லவா நிலைக்கும், தழைக்கும்!

போர் முடிந்துவிட்டது! பலாபலன் தெரிந்துவிட்டது!! என்ன

(14-ம் பக்கம் பார்க்க)




[ சில கற்பனைக் காட்சிகள் ]

### பாதை

இருப்போர்;- தீட்சிதர் (பிறகு) முனியன்

நிலைமை விளக்கம்:- [தீட்சிதர் ஐம்பதைத் தாண்டியவர். தலையில் தூக்கமுடியாத அளவுள்ள மூட்டையைத் தூக்கிக்கொண்டு நடந்து வருகிறார். பாதையில் பலர் பார்த்து முணுமுணுக்கிறார்கள். மூட்டையைத் தூக்கிக் கொண்டுவர யாராவது கிடைக்க மாட்டார்களா, என்று எதிர் பார்த்தபடி நடந்து வருகிறார்.

முனியன் பட்டிக்காட்டுப் பாட்டாளி. தீட்சிதருக்குத் தெரிந்தவன். அவன் விறகுக்கட்டு விற்றுவிட்டு, பணத்தைக் கணக்குப் பார்த்து மேல் வேட்டியில் முடிந்துகொண்டே, எதிர்ப்புறமாக வருகிறான்.

அவனைச் சற்றுத் தொலைவில் கண்டதும் தீட்சிதர், சரியான ஆசாமி கிடைத்தான் என்று மகிழ்கிறார்.

அவன் அருகே வந்ததும்......]

*

தீட்சிதர்:- (ஆயாசத்துடன்) யாரடாப்பா அது.....முனியனா......பாரடப்பா, எனக்கு இந்தத் தள்ளாத வயதிலும் கர்மம் விட்டபாடில்லை. என்னாலே முடியறதோ, இந்த வெயில்வேளையிலே, இந்த மூட்டையைத் தூக்கிண்டு நடக்க...சித்தே, கைகொடுத்துக் கீழே இறக்கு......கொஞ்சம் ஓய்வு எடுத்துண்டு பார்ப்போம்........

முனியன்:- ஐயயோ! நீங்க ஏன் சாமி, இந்த வெய்ய வேளையிலே புறப்பட்டீங்க, மூட்டையை வேறே தூக்கிகிட்டு......இருங்க, இருங்க, இதோ......(மூட்டையை இறக்கியபடி) உங்களாலே முடியுமா என்ன! பளுவுதான்......

தீட்சி:- ஏண்டாப்பா முனியா! ஆத்துவரைக்கும் இதைத் தூக்கிண்டுவந்து கொடுத்துடுவயோ... என்னடா இது, வழியே பார்த்ததும் ஐயன், வேலை வைக்கிறானேன்னு எண்ணிண்டுடாதே.....

முனி:- அதென்னங்க அப்படிச் சொல்லிப் போட்டீங்க, இந்தச் சகாயம் செய்தா என்னா—தேஞ்சா போயிடும்......

தீட்சி:- நீ தங்கமானவன்......சில பேர், தங்களோட கௌரவம் குறைஞ்சிடுவதாக எண்ணிண்டிடுவா........

முனி:- நீங்க நடங்க சாமி! நான் தூக்கிகிட்டு வாரேன்......

தீட்:- புண்யவான்! பரோபகாரி! தர்மவான்! வா! வா!!

### தீட்சிதர் வீடு

இருப்போர்:- அகிலாண்டம் (பிறகு) தீட்சிதர், முனியன்.

நிலைமை விளக்கம்:- [முனியன், மூட்டையைக் கீழே இறக்கி வைக்கிறான் தெருத் திண்ணையில்.

தீட்சிதரிடம் விடைபெற்றுக் கொண்டு போகிறான்.

தீட்சிதர் தெருத்திண்ணையிலிருந்து மூட்டையை உள்ளே தூக்கிக்கொண்டு போகிறார்.

அகிலாண்டம் அடுக்களையிலிருந்து ஓடிவந்து, தீட்சிதருக்கு உதவி செய்தபடி...]

*

அகிலாண்டம்:- கர்மம்! கர்மம்! உம்மாலே ஆகுமா, இப்படி மூட்டையைத் தூக்கிக்கொண்டுவர. வெயில் வேறே நெருப்பாகாயறது......

தீட்சிதர்:- (முகத்தைத் துடைத்துக்கொண்டு) ஊறுகாய்க்கு மாங்கா வேணும்னு உசிரை வாங்கிண்டிருந்தயேன்னோ! பார், பவுன் பவுன்போல இருக்கு — நல்ல பச்சரசி மாங்காய்டி......

அகி:- அதுகிடக்கட்டும்.......... உம்மை யார், சுமந்துண்டு வரச் சொன்னா....கழுத்து கழுத்து சுளிக்கிண்டதானா, யார் பாடு படறது.......

தீட்சி:- சும்மாகிடடி! நானா தூக்கிண்டு வந்தேன். அந்த அசடன் தெரியுமேல்லோ, முனியன்.

அகி: யார்? கிராமத்துக்காரன்....
............

தீட்சி: அந்த முண்டம் தான் தூக்கிண்டு வந்தது.

அகி:- நன்னா இருக்கு—அவனண்டை வேலையும் வாங்கிண்டு, மண்டுன்னு வேறே ஏசறதா.......

தீட்சி:- அவன் எதிரேயா சொல்வேன். அவன் எதிரே, பரோபகாரி, தர்மவான், புண்யவான் என்றெல்லாம் நல்ல வார்த்தை சொல்லித்தான், அவன் தலையிலே இதை வைத்துக்கொண்டு வந்தேன்......

அகி:- அருமையான காய்! ஊறுகாய் போடத் தரமா இருக்கும்......

தீட்சி:- கையோடுகையா, இப்பவே போயி, காதர் சாயபுவிடம் உப்பு கேட்டு வாங்கிண்டு வந்துவிடறேன்—நேத்து சாயபைசுட அவனைப்பார்த்து ஒரு 'சௌக்யமா'

போட்டுவைச்சேன்.....,...கதவைத் தாள்போட்டுவை, இதோ வந்துடறேன்......

**மிராசுதார் பங்களா**

**இருப்போர்:-** மிராசுதார் கனகசபைப்பிள்ளை காத்தான்.

**நிலைமை விளக்கம்:-** [கனகசபை கடுங் கோபத்துடன் இருக்கிறார்.

சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மீசையை முறுக்கியபடி பேசுகிறார்.

பக்கத்தில் பெரிய புளியமிலாரு இருக்கிறது.

எதிரே, மேல்வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு காத்தான் நிற்கிறான்.

அவன் பயத்துடன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு ஓரளவு சந்தோஷம்கொண்ட நிலையில், உரத்த குரலில், மிரட்டும் பாணியில், மிராசுதார் பேசுகிறார்.]

*

**கனகசபை:-** தோலை உரிச்சு எடுத்துடுவேன் — நிஜத்தைச் சொல்லு—அந்தப் பாப்பானிட்ட எவ்வளவு பணம் வாங்கினே...

**காத்தான்:-** காக்காசுகூட வாங்கலிங்க...சத்யமா...

**கனக:-** சத்யசந்தரு இவரு...ச்சீ கழுதே! நிஜத்தைச் சொல்லு, ஒரு மூட்டை மாங்காய் பறிச்சி கொடுத்திருக்கறே, ஒரு ரூபாயாவது வாங்காமலா இருந்திருப்பே...

**காத்:-** சாமிசாட்சியா சொல்றேன் எஜமான்! நான் பறிச்சிக்கொடுக்கல்லிங்க. கீழே விழுந்ததை தீட்சிதரு பொறுக்கி எடுத்துக்கிட்டாரு.

**கனக:-** மாங்கா கீழே விழுந்ததா? ஏண்டா, மந்திரத்தாலே விழவைச்சாரா தீட்சிதர். என்னடா கதை அளக்கிறே......

**காத்:-** நான் கல்லாலே மரத்திலே அடிச்சேனுங்க, மாங்கா கீழே விழுந்திச்சி......

**கனக:-** கல்லாலே அடிச்சி மாங்காயை விழவைச்சயா...ஏண்டா! யார் அப்பன் வீட்டுச் சொத்து? பிள்ளை தோட்டத்து மாங்கான்னு, போறவன் வாரவன் எல்லோருக்கும் சொந்தமா? ஏன், மாங்கா அடிச்சே சொல்லு......

**காத்:-** மாங்கா அடிக்கலிங்க...... தீட்சிதரு, மரத்திலே உச்சாணிக் கிளையிலே ஒரு பச்சைப் பாம்பு இருக்குடா, அதைக் குறிபார்த்து கல்லாலே அடிச்சுப்போடு, இல்லேயானா, அது யாரோட கண்ணையாச்சும் குத்திடும்னு சொன்னாரு......

**கனக:-** என்னடா கதை பேசறே ......

**காத்:-** கதை இல்லிங்க! நிஜமாத்தான் ஐயர் சாமி சொன்னாரு...... அதோ பார்டா, காத்தான்னு காட்டினாரு, என் கண்ணுக்குச் சரியாத் தெரியலே.....சாமி சொல்றதுச் சரியாத்தான் இருக்கும்னு, ஒரு பத்து இருபது கல்லேவிட்டெறிஞ்சேனுங்க...பச்சைப் பாம்பு இலையோடு இலையா ஒட்டிக்கொண்டுதுடா காத்தான், இனி அதை அடிக்க முடியாதுன்னு பிறபாடு சொன்னாரு.. இதுக்குள்ளே, நான் பாம்பை அடிக்க வீசின கல்லாலே, மாங்கா சிதறிக் கீழே விழுந்துதுங்க......காத்தான், வீணாப் போறதை நான் வீட்டுக்கு எடுத்துகிட்டுப் போறேன்னு தீட்சிதரு சொன்னாரு, நானும் சரின்னு சொல்லிப்போட்டேனுங்க......

**கனக:-** தர்மம் செய்திங்களோ தர்மம்! டேய்! எவ்வளவு மாங்கா இருக்கும்......

**காத்:-** ஒரு ஐம்பது நூறு இருக்கும்......

**கனக:-** சரி, கூலியிலே ஒண்ணரை ரூபா பிடித்துக்கொண்டாச்சி போடா......

**காத்:-** எஜமான் பிள்ளைகுட்டிக்காரன்......

**கனக:-** தர்மம் செய்யறாரு தொரைமவன்...ஏண்டா! மடையா, பச்சைப்பாம்பு தெரியறதுன்னு அந்தப் பாப்பான் காட்டினா, நிஜமா பொய்யான்னுகூட யோசனை இருக்க வேணுமா? கல்லே வீசறதா! அவன் உன் மடைத்தனத்தைத் தெரிஞ்சிகிட்டுத்தான், பாம்பு இருக்குடான்னு சொல்லி, மாங்காய்க்கு வழி செய்துகிட்டான்.......

**காத்:-** ஆமாங்க, எஜமான்........ இப்பத்தான் புரியுது......

**கனக:-** மடப்பயமவன்! போடா, போய், இழுத்துகிட்டு வாடா, ஐயனை......

**பாதை**

**இருப்போர்:-** தீட்சிதர், சிங்குபட்டர்.

**நிலைமை விளக்கம்** [கையில் வாழை இலைக்கட்டு தூக்கிக்கொண்டு சிங்கு பட்டர் வருகிறார்.

வேகமாக, எதிர்ப்புறமாக தீட்சிதர் வருவதைப் பார்க்கிறார்.

தீட்சிதர், அருகில் வந்ததும் .........]

*

**சிங்குபட்டர்:-** தீட்சிதரவாள்! என்ன ஏதோ பெரிய மூட்டை கொண்டுபோனீராமே ஆத்துக்கு .........

**தீட்சிதர்:-** அடாடாடா! இதுக்குள்ளே உம்ம காதுக்கு வந்தூட்டுதா? ஏன்யா பட்டாச்சாரியாரே! எங்கே என்ன நடக்கறது என்கிறதைத் தெரிஞ்சுக்கொள்றதுக்காகவே பூலோகத்திலே ஜெனித்திருக்கீரா?

**சிங்கு:-** அது கிடக்கட்டும் தீட்சிதரவாள்! பேச்சை ஏன் மாத்தறீர்? என்ன மூட்டை? அதைச் சொல்லும்.

**தீட்சி:-** தங்கம் ஓய், அசல் தங்கம் அவ்வளவும்!

**சிங்கு:-** தங்கம் கூடக் கிடைக்குமான்னுத்தான் தவியாய்த் தவிக்கிறீர். என்ன செய்யலாம். அதுக்கு இது காலமல்லவே. ராஜாக்கள் மகாராஜாக்கள் காலத்திலே நம்ம வாளுக்குத் தங்கமென்ன, நவரத்

## பிரச்சினை தீர்ந்தது!

—[]—

"வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாகிவிட்டதல்லவா —இந்தப் பிரச்சினையை ஒழித்துக் கட்டும் அபூர்வ வழி எனக்குத் தெரியும்"—என்றான் ஒருவன்.

மற்றவன் ஆவலுடன் கேட்டான்! "என்ன வழி? என்ன வழி? சொல்லு, கேட்போம்!" என்று.

அமைதியாக அவன் சொன்னான் "ஆடவர்களை எல்லாம் ஒரு கண்டத்திலும் பெண்களை எல்லாம் மற்றோர் கண்டத்திலும், இருக்கச் செய்துவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடும்!"

திகைத்துப்போய் அவன் கேட்டான் "அப்படிச் செய்துவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடுமா? என்ன வேலைகிடைத்துவிடும்"

"வயது வந்த அத்தனை ஆடவர்களுக்கும் தொழில் கிடைத்துவிடும்" என்றான் யோசனை கூறினவன்.

"என்ன தொழில்?" என்று கேட்டான் ஆவலுற்றவன்.

"கப்பல் கட்டும் தொழில்" என்றான் அந்தக் குறும்புக்காரன்.

னம் கூடத்தான் கிடைச்சிண்டு இருந்தது. அதை எண்ணி என்ன பிரயோஜனம். மூட்டையிலே என்ன இருந்ததுன்னு சொல்லும் ஒய்.

தீட்சி:- மாங்காய், பட்டாச்சாரி ஸ்வாமி! சாதாரண மாங்காய்......

ரங்கு:- எங்கே கிடைச்சுதோ?

தீட்சி:- கிடைச்சுது உம்ம மாமியார் ஆத்திலே. எஙகே கிடைச்சுது, எப்படிக் கிடைச்சுது, ஏன் கிடைச்சுதுன்னு ஙளறிக் ஙளறிக் கேட்கணுமோ......

ரங்கு:- சொன்னு என்ன தீட்சிதரவாள்! மாங்காய் அழுகிடுமோ, இல்லெ, உம்ம வாய்தான் வலிக்குமோ........

தீட்சி:- விடமாட்டீரே நீர். எங்கேயும் இல்லேங்கானும், நம்ம கனகசபையோட தோட்டத்திலே இருந்து கொண்டுவந்தேன்......

ரங்கு:- பிள்ளைத் தோட்டத்து மாங்காயா! பிரமாதமா இருக்குமே. பிள்ளைவாள், ஊரில் இருக்காரோ ......

தீட்சி:- இருந்தார்.... .இப்ப தெரியாது.

## உப்பு மண்டி

இருப்போர்:- சுல்தான், தீட்சிதர்.

நிலைமை விளக்கம் [சுல்தான், கடையில் கால்மீது கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்துகொண்டு, ஒரு பழைய சினிமா பாட்டுப் புத்தகத்தைச் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருக்கிருர்.

தீட்சிதர் அங்கு வருகிருர்]

*

தீட்சிதர்:- யார், காதர் சாயபோட தம்பிதானே......

சுல்தான்:- ஆமாம், ஐயர்!...என்ன அண்ணுச்சியை எதுக்குத் தேடறீர்......

தீட்சி:- அண்ணுச்சியைத் தேடறது, ஏன் உனக்கென்ன. ராமசந்திரரோட தயவுகிடைச்சா என்ன இலட்சுமணரோட தயவு கிடைச்சா என்ன. எல்லாம் ஒண்ணுதான் ........

சுல்:- நல்லவேளை, அனுமார் ஆக்கிவிடாமே, இலட்சுமணனேட நிறுத்திகிட்டிங்களே. சரி காலங்காத்தாலே ராமாயண காலட்சேபத்துக்கு நேரம் நம்ம மண்டியிலே கிடைக்காது........என்ன விசேஷம் அதைச் சொல்லுங்க ........

தீட்சி:- உப்புமண்டி அப்துல்லான்னு உங்க தோப்பனுர் பிரமாதமான பேர் எடுத்தார்.....காதருக்கு மட்டுமென்ன, தங்கமானவன்...... உன்னேட மனசுதான் எப்படி இருக்குன்னு பார்க்கோணும்......

சுல்:- பீடிகை ரொம்பப் பலமா இருக்கே......

தீட்சி:- ஒன்னுமில்லே டாப்பா, சுல்தான்தானே உன்னேட பேரு ......நம்ம கனகசபை இருக்கானே ......

சுல்:- யாரு? கரும்பாலை நடத்தருரே......

தீட்சி:- ஆமாம், கரும்பாலைக்கு யார் முகூர்த்தம் பார்த்துக்கொடுத்ததுன்னு தெரியுமோ? நான்தான். என்னிடம் அவனுக்குப் பொருப்பிதி. அவன் ஒரு ஐம்பது நூறு மாங்கா கொடுத்தான் — ஊறுகாய்க்கு உபயோகமாகட்டும்னு...

சுல்:- அதுக்கு உப்பு வேணும். அதானே ...

தீட்சி:- புத்திசாலிடா சுல்தான்! சொல்லிண்டே இருக்கச்சே, புரிஞ்சிண்டயே......காதரைவிட உனக்குச் சூக்ஷமம் இருக்கு, புத்தி தீட்சனியம் இருக்கு......

சுல்:- சரி ஐயரே! அதிகமாப் பேச நேரமில்லே......ஒருபடி...... போதும்......இல்லையா......சாயரட்சை நம்ம கடைப்பையன் கொண்டுவந்து கொடுப்பான் போங்க......

தீட்சி:- இதுக்கு ஒரு ஆள் வரனுமா......இதோ இந்தத் துண்டிலே போடச்சொல்லப்பா, நான் எடுத்துண்டு போறேன். கௌரவமா குறைஞ்சுடும்......

[காத்தான் வருகிருன்]

காத்தான்:- ஐயா, தீட்சிதர் சாமி, வாங்க, எஜமான் கையோடு அழைச்சிண்டு வரச்சொன்னுரு...

தீட்சி:- யாரை? என்னையா?

காத்:- இல்லெ, இல்லெ, உங்க பாட்டனை......வாய்யா......

## கனகசபை பங்களா

இருப்போர்:- கனகசபை, தீட்சிதர், காத்தான்.

நிலைமை விளக்கம் [காத்தான், தீட்சிதரை அழைத்து வந்து மிராசுதார் எதிரே விட்டுவிட்டு, வெளியே போய்விடுகிருன், கனகசபை, தீட்சிதரை முறைத்தபடி மீசையை முறுக்கிவிட்டுக்கொண்டிருக்கிருர். தீட்சிதர் ஒரு அசட்டுப் புன்னகையுடன், அங்கு இருந்த ஒரு பழைய நாற்காலியில் உட்காருகிருர்: கனகசபை, கோபமாகப் பேச்சைத் துவக்குகிருர்.]

*

கனக:- ஏன்யா, பச்சைப் பாம்பு இருந்துதா மரத்திலே, வேப்பமரம், வேலமரம், அரசமரம், இதிலே எல்லாம் இல்லெ, மாமரமாப் பாத்து பச்சைப்பாம்பு ஏறிகிட்டு, உன்கிட்டச் சொல்லிடுச்சா......

தீட்சி:- பிள்ளைவாள்! என்ன இவ்வளவு ஆத்திரமாப் பேசறேள் ......என்ன தப்பு நடந்துட்டுது. என்னலே......

கனக:- இதோ பாரய்யா, உன்னேட தந்திரப் பேச்சை எல்லாம் மூட்டைகட்டி வைத்துடு...ஆமாம் ஒரு ஏமாளிப்பய கிடைச்சான்னு, அவனிடம், மாமரத்திலே பச்சைப் பாம்பு இருக்கு, கல்லாலே அடிடான்னு சொல்றதும், மாங்கா சிதறினு மூட்டைகட்டிகிட்டுப் போறதும் ஒழுங்கான வேலையோ......பச்சைப் பாம்பாம், பச்சை! பார்த்தீரா கண்ணுலே......

தீட்சி:- இரகசாரம் பிள்ளைவாள், என் போருதவேளை, உமக்குக் கோபம் வர்ரது......எனக்கோ வயசாச்சி, கண்பார்வை மங்கியிருக்கு,

## நேற்றுதான் படித்தேன்!

—★—

அமெரிக்காவில் ஒரு ஓட்டலில், ஒரு யூதனைப் பலமாகத் தாக்கிக்கொண்டிருந்தான் ஒரு அமெரிக்கன்.

அட ஏளப்பா! இப்படி அவனை அடிக்கிருய்? என்று கேட்டனர் அங்கிருந்தோர்.

அமெரிக்கன் ஆத்திரத்துடன், "ஏன் என்ரு கேட்கிறீர்கள்? ஏன் இவனை அடிக்கிறேன் என்ரு கேட்கிறீர்கள்? இவன் யார் தெரியுமா? இவன் ஒரு யூதன்! யூதனய்யா யூதன்! தேவகுமாரனும் நமது ரட்சகன் ஏசுநாதரைக் காட்டிக் கொடுத்த கயவன்!" என்று முழக்கமிட்டான்.

"பைத்யக்காரா! ஏசுநாதரைக் காட்டிக் கொடுத்தவன் இந்த யூதனல்ல; அவன் வேறுஒருயூதன். மேலும் அதுநடைபெற்று 2000 ஆண்டுகளாகின்றனவே!" என்று விளக்கமளித்தனர்.

அமெரிக்கன், "ஆனுல் நான் அதுபற்றி நேற்றுத்தான் படித்தேன். அதனுல்தான் ஆவேசமடைந்தேன்" என்ருன்.

"இவன் நல்ல கிருஸ்தவன்! ஆமென்!" என்றனர் மற்றவர்,

கண்ணாடி போடணும் போடணும்னு இரண்டு வருஷமா யோசனை, நடக்கல்லே.........என் கண்ணுக்குப் பச்சைப் பாம்பு, சுத்தி வளைச்சிண்டு இருக்கறது போலத்தான் தெரிஞ்சுது......... காத்தானோடு சொன்னேன், அட அப்பா! அதோ பார்டா, பச்சைப் பாம்புபோல இருக்குன்னு...அவன் நாலு கல்லை விசினான், பத்து காய் கீழே விழுந்தது......

கனக:- பச்சைப் பாம்பு இருந்ததா?

தீட்சி:- இப்படி கோர்ட்டிலே கேட்பது போலக் கேட்டா, நான் என்ன பதில் சொல்ல முடியும், என் கண்ணுக்குப் பச்சைப் பாம்பு போலத் தெரிஞ்சுது. வயதான காலம். ஒரு எழவும் சரியாப் புரியரது இல்லே. நேத்து சாயரட்சை இதுபோலத்தான் அசம்பாவிதமா நடந்தூட்டுது...நம்ம அம்சா இருக்கா பாருங்கோ, அவ தான் வர்ரான்னு எண்ணிண்டு யாரோ ஒரு குஜராத்திப் பெண்ணண்டைப் போயி சௌக்யமான்னு கேட்டுட்டேன்......

கனக:- அம்சாவைப் போலவே இருந்தாளா அந்தக் குட்டி!

தீட்சி:- அதே உயரம், நிறம், நடை—அம்சா போலவே இருந்தா போங்க...கிட்டப்போயிப் பார்த்த பிறகுதான், இது வேறேன்னு தெரிஞ்சுது — அம்சாவோட கண்ணழகு இவளுக்கு இல்லே......

கனக:- மஹா அழகைக் கண்டுட்டீர்...கண்ணழகாம் கண்ணழகு...... திருட்டுக் கண்ணு......

தீட்சி:- அப்படிச் சொல்லாதிங்கோ...ஏதோ விஷக்கடி வேளை உமக்கும் அவளுக்கும் விரோதமாயிட்டுது...அதனாலேயே, அம்சா அழகு இல்லாதவன்னு சொல்லி விடலாமோ......

கனக:- அழகு இருந்தாப் போதுமாய்யா...அன்பு இருக்கவேணும்... அதுதானே முக்கியம்...

தீட்சி:- சந்தேகமென்ன.....ஆனா அவளுக்கு அன்பு கிடையாது என்கிறீரா.....நான்தான் சொல்றனே, விஷக்கடி வேளை...உண்மையிலே, உம்மமேலே, அவளுக்கு உயிர், பிள்ளைவாள்.........இதோ பாருமே, ஏதோ என் போறுத வேளை இந்த மாங்காயை எடுத்துண்டு போனனா...அதைக் கேள்விப்பட்டதும், ஆத்துக்கு வந்திருந்தா, அவரைப் பார்த்திங்களா, எப்படி இருக்கார், உடம்பு இளைச்சிருக்காமேன்னு சரமாரியா கேள்விகளைப் போடறு......

கனக:- பேச்சிலே கெட்டிக்காரி தான்...

தீட்சி:- நானும் சும்மா ஒரு போடு போட்டேன்...பிள்ளைவாள், உனக்குத்தாண்டிம்மா இந்த மாங்காயைத் தரச்சொன்னார்னு...

கனக:- என்ன சொன்னா...என்ன ......சொன்னா......?

தீட்சி:- ராமாயணத்திலே வர்ரது பாருங்கோ, அசோக வனத்திலே சீதா பிராட்டியாரிடம் அனுமான் ஸ்ரீராமச்சந்திரரோட கணையாழியைக் கொடுத்ததும் ஜானகியோட கண்களிலே ஆனந்தபாஷ்பம் பொழிந்ததுன்னு, அதுபோலாயிட்டா...எனக்கு ஏது ஸ்வாமீ! அந்தப்பாக்கியம்! பகவான் என் பங்கிலே இல்லையே....ன்னு சொல்லி பிரலாபிக்க ஆரம்பிச்சா. நான், அழாதேடி அம்சா! நானே போயி, அவரண்டை பேசறேன்னு சொன்னேன். நானே நாளைக்கு இங்கு வர்ரதாக எண்ணிண்டிருந்தேன்.... அதுக்குள்ளே......காத்தான் வந்தான்...

கனக:- அப்படியா....சரி....சரி.... என்னது மூட்டை இது...

தீட்சி:- உப்பு! ஊறுகாய்ப் போடுவதற்கான சாமான்களைத் தருவதாக நம்ம உப்பு மண்டி காதர் சாயபு சொன்னான்—உப்பு எடுத்துக் கொடுத்தூட்டு, மிளகா பெருங்காயம் இதுக்கெல்லாம், பணம் கொடுக்கப் போறசமயம்.....அதுக்குள்ளே, காத்தான் வந்தூட்டான்....

கனக:- அதனாலே என்ன? எவ்வளவு பிடிக்கும்...மூன்று ரூபா... போதுமா...

தீட்சி:- எங்க ஆத்துக்காரி, ஒரு தாராள தண்டி! ஐந்து ரூபாயாகும்னு சொல்ரு.

கனக:- இந்தாரும், ஐந்து...

தீட்சி:- பிள்ளைவாள்! ஒரு மனு... கோவிக்கப்படாது...

கனக:- என்னய்யா......சும்மா சொல்லு......

தீட்சி:- ஊறுகாய்ப் போட்டானதும், பாதி அம்சாவுக்கு...

கனக:- அட, கொடு, யார் வேண்டாமென்கிரு...

தீட்சி:- அடடா! நான் கொடுப்பதா. நீங்களே கொண்டுபோய்க் கொடுத்தாத்தான் வாங்குவாள்,,,

கனக:- கெட்டிக்கார ஆளய்யா நீ, ஆகட்டும்பார்ப்போம்.........டே! காத்தான்! ஐயருக்கு இன்னும் ஒரு நூறு மாங்கா பறிச்சிக்கொடு...... ஊறுகாப் பிரமாதமா இருக்க வேணும்... ...

தீட்சி:- நேக்குத் தெரியாதோ பிள்ளைவாள்! அம்சாவே சொல்லப் போறு பாருங்கோ, பிரமாதம்னு .........

★

## சாயம் வெளுக்கிறது!

ஆமாம், சாயம் வெளுக்கிறது, கதருடைய சாயம், காங்கிரஸ் ஆட்சியில். கதர், ஒரு பயனற்ற திட்டம், என்று மற்றவர்கள் சொல்லும் போது கண்கள் சிவந்து விடுகிறது காங்கிரஸ்காரர்களுக்கு. எங்களுடைய ஆட்சி வந்தால் பட்டாளத்திலும் போலீசிலும் கதர்தான்! என்று மார்தட்டினார்கள். ஐயா! கதர், உழைப்புக்கு ஒத்துவராது, நாள்பட நிற்காது, சாயம் நிலைத்திருக்காது • என்று சொன்னால் கோபம் கொப்பளித்தது. சில தினங்களுக்கு முன்பு, கதர் சட்டை எப்படிச் சின்னாபின்னமாகி விடுகிறது என்பதை எடுத்துக்காட்ட ஒரு சர்க்கார் சிப்பந்தி நைந்து போய், நூல் நூலாகப் பிரிந்த நிலையில் இருந்த கதர்ச் சட்டையைப் போட்டுக் கொண்டு ஒரு விழாவில் கலந்து கொண்டது கண்டு, ஜகஜீவன்ராம் எனும் காங்கிரஸ் மந்திரிக்குக் கடுங் கோபம் பிறந்தது—ஆஹா! என் எதிரில் கதர் இப்படி அவமானப் படுத்தப்படுகிறதே, இதை என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது என்று ஆவேசமாகப் பேசினார்.

ஆகஸ்ட் 5-ந் தேதி கதருடைய 'இலட்சணத்தை' ஒரு காங்கிரஸ் மந்திரியே டில்லி லோக சபையில் எடுத்துக் காட்டி விட்டார்.

பட்டாளத்தில் உள்ளவர்களுக்குக் கதர் சட்டையும் சராயும் கொடுத்தார்களாம்-சில நாட்களில், அது சாயம் வெளுத்து, சிலருக்குப் பழுப்பு, சிலருக்குக் கருப்பு, சிலருக்குச் சாம்பல் நிறம், சிலருக்குக் காவி நிறம் இப்படி ஆகிவிட்டதாம்— இதைக் கண்டு பட்டாளத்து ஆபீசர்கள், கதர், பட்டாளத்துக்கு இலாயக்கானதல்ல- என்று கூறி விட்டனராம்.

இந்தத் தகவலை, டில்லி மந்திரி, தியாகி எடுத்துச் சொன்னார்.

கதர்–தாரகம் என்று பேசுவோர் தியாகியின் பேச்சுக்கு என்ன பதிலுரைப்பர்! சாயம் வெளுக்கிறதே!



# மக்கள் கரமும் மன்னன் சிரமும்



கிராம்வெல்.

சார்லஸ்.

மாமன்றத்தை மன்னன் கூட்டியது, ஸ்காத்லாந்துப் போர் நடாத்தப் பணம் தேவை என்பதற்காக; மாமன்றம் உடனடியாக ஸ்காத்லாந்துக்காரருடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்தது. மன்னனால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

எவ்வளவு ஆணவம் இந்த மாமன்றத்தாருக்கு! என் ஆணையை மீறும் ஸ்காட் மக்களைத் தண்டிக்கப் போர் தொடுக்கிறேன், மன்னனுடைய கீர்த்தியைக் காப்பாற்றப் பொன், பொருள் தந்து, படையில் குதித்து இரத்தம் கொட்டி வெற்றி தேடித்தர முன்வர வேண்டிய மக்கள், சமர் கூடாது என்று எனக்கா புத்தி கூறுவது? எவ்வளவு மண்டைக் கர்வம்! மன்னனின் மகிமை அறியாத மண்டுகங்கள்! என்றெல்லாம் எண்ணியிருப்பான் மன்னன், அவன்தான், பாவம், ஒரு அர்த்தமற்ற, ஆனால் ஆபத்தான தத்துவத்தால் ஆட்டிப் படைக்கப்பட்டவனாயிற்றே! மாமன்றத்தைக் கலைத்துவிட்டான்! மூன்று கிழமைகளே மாமன்றம் நடைபெற்றது! கலைத்துவிட்டான், காவலன்! இந்தக் குறுந்தொகை பிறகு நெடுநல் வாடையாகப் போவதை மன்னன் கண்டானா!!

"கூடினோம்—கலைந்து செல்கிறோம்; மீண்டும் கூடுவோம்; அப்போது, இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குச் சமாதானம் கேட்க அல்ல, பழிதீர்த்துக்கொள்ளக் கூடுவோம்" என்று எழுச்சியுடன், உரைத்தார் செயிவ்ட் ஜான், எனும் மாமன்ற உறுப்பினர். அவர் கூறியது உண்மையாயிற்று.

மாமன்றம் கூடுகிறது, கொடுமை களையப்படும் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு, மன்னன் செயல் மிகுந்த கோபத்தை மூட்டிற்று. தலைவர்கள் முன்வந்தால், இரத்தப் புரட்சிக்கே மக்கள் தயாராகிவிடுவர். நிலைமை அங்ஙனம் இருந்தது. ஆத்திரம்கொண்ட மக்கள் சிறுசிறு கலாம் விளைவிக்காமல் இல்லை. ஆத்திரத்தைக் குறைத்துக் கொள்ள, வேறு மார்க்கமில்லை. ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள், லாட் மாளிகையைச் சூழ்ந்து கொண்டனர்; துருப்புகளை விட்டுத்தான் அடக்க முடிந்தது.

ஆயிரக் கணக்கானவர்கள் அரசன் ஆணையை நிறைவேற்றும் நீதிமன்றத்திலே புகுந்து கலாம் விளைத்தனர். நாடு, வெடிமருந்துச் சாலையாகிவிட்டது.

**சி.என்.அண்ணாத்துரை.**

மன்னனோ, மாமன்றத்தைக் கலைத்துவிட்டு, பொருள் திரட்ட வேறு வழி என்ன என்று யோசிக்கலானான்.

இலண்டன் நகரப் பிரமுகர்களைக் கடன் தரும்படி கேட்டான்—மறுத்தனர் பலர்,

லாட், "இவர்களுக்குத் தக்கபாடம் கற்பிக்க வேண்டுமானால், சிலரையாவது தூக்கிலிடவேண்டும்" என்று கூறினான். மன்னன் அந்த அளவு செல்ல விரும்பாமல் சிலரைச் சிறையில் அடைத்தான். தூக்குமேடை, மன்னர்களால்தான் அமைக்க முடியும் என்று லாட் எண்ணிக்கொண்டான்!

படை கூடி நிற்கிறது—பணம் தேவை, சம்பளம்தர! போர் என்றால் வீரமுழக்கம் மட்டுமா! ஆண்டவன் அருளால் அரசனானேன் என்று தத்துவம் பேசினான், போர் நடத்தப் பணத்துக்கு, அருள் போதுமானதாக இல்லை. முறை தவறிய செயல்களில் ஈடுபட்டாவது பணம் திரட்டியாக வேண்டும், எதிரிகள், பிரிட்டன்மீது பாய்ந்து வருகிறார்கள், பிரிட்டிஷ் மக்களோ ஸ்காட்படையை எதிரிப் படை என்று கருத மறுக்கிறார்கள், ஆணவம் பிடித்த அரசனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வருகிறார்கள் நம் நண்பர்கள் என்றே எண்ணிக்கொண்டனர்.

ஸ்காட் படையிலே எழுச்சி, உறுதி; மன்னன் படை வரிசையிலே பிளவு, பணமுடை, குழப்பம்!

இந்நிலையில் மன்னன், ஸ்பெயின் நாட்டு வணிகர்கள், பாதுகாப்புக்காக அரசாங்கத்திடம் ஒப்படைத்திருந்த தங்கப் பாளங்களைக்கூட எடுத்துக்கொண்டான். கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குச் சொந்தமான மிளகு முழுவதையும், பணம் கொடுக்காமல் எடுத்துக்கொண்டு, அதை விலையைத் தள்ளிவிற்றுப் பணம் திரட்டினான். உடன் இருந்த உல்லாசப் பிரபுக்களிடமெல்லாம் பணம் திரட்டினான்.

ஸ்காட் படை முன்னேறியவண்ணமிருக்கிறது! மன்னனைக்கண்டு எமது மக்களின் குறையை எடுத்துக் கூறச் செல்கிறோம், எம்மைத் தடைசெய்யாதீர்; என்று மன்னர் படையினருக்குக் கூறியவண்ணம் முன்னேறுகிறது. எதிர்த்துப் பார்த்த மன்னன் படை தோல்வியே கண்டது! முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை! நகரங்கள், ஸ்காட் படைகளிடம் சிக்குகின்றன, ஓரிடம்விட்டு மற்றோர் இடம் பின்னோக்கி ஓடுகிறது மன்னன் படை! தோல்வி! கேவலமான தோல்வி! மன்னன், இனி நிலைமை மிக மோசமாகிவிடும் என்றறிந்து, சமரசத் தூது அனுப்பினான். சமாதானம் நிறைவேற்றப்படும் வரையில், மன்னன் தன் படைக்கும், ஸ்காட் படைக்கும், சேர்ந்து பணம் தரவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இதற்காகப்பெரும் பொருள் தேவைப்படுகிறது, என்ன செய்வான் வேந்தன்! நாட்டிலுள்ள பிரபுக்களை எல்லாம் கூட்டிக் கேட்டான், அவர்களோ, நெருக்கடியைப் போக்க மாமன்றத்தால் மட்டுமே முடியும்,

எனவே மன்னன் மாமன்றத்தைக் கூட்டியாகவேண்டும் என்று கூறிவிட்டனர்.

எங்கு சுற்றி வந்தாலும், மீண்டும் மீண்டும், மாமன்றத்துக்கே வந்து சேரவேண்டி இருப்பது கண்டு மன்னன் வாட்டமடைந்தான்—தேர் தன் நிலைக்குவந்து தீரவேண்டியதுதானே, என்று மக்கள் எண்ணி மகிழ்ந்தனர்.

மாமன்றம் கூடிற்று! பிரிட்டிஷ் வரலாற்றை மாற்றி அமைக்கும் ஆற்றலைக்கொண்ட மாமன்றம் கூடிற்று! மன்னராட்சி முறையின் கேடுகளைக் களைந்து தீருவது என்று உறுதி பூண்ட மாமன்றம் கூடிற்று! மன்னன், வாயடைத்துக் கிடந்தான். தன் ஆதிக்கம் அழிந்துபடும் என்று அச்சம் குடிகொள்ளலாயிற்று. நாட்டை ஆளும் மன்னன், நடுச்சந்தியில் நிற்பவன்போலாகிவிட்டான்; இரு படைகள், ஒன்றை ஒன்று தாக்க வேண்டியவை, ஆனால் அவை இரண்டும் சேர்ந்து மன்னனைத் தாக்குகின்றன, பணம், பணம் என்று! மக்களோ, தங்களுக்கு ஒரு மன்னன் உண்டு என்பதை எண்ணவும் வெட்கமும் வேதனையும் அடைகின்றனர், மாமன்றமோ, நாட்டு மக்களின் முழு நம்பிக்கைக்கும் இருப்பிடமாக விளங்குகிறது.

மாமன்றம் கூடியதும், மன்னனிடம் மனுச்செய்து கொள்ளும் நிலை கூட அல்ல, கண்டிக்கும் நிலை பிறந்தது.

கெஞ்சினோம், மிஞ்சினான்; பணிவு தெரிவித்தோம், பஞ்சைகள் என்றான், அன்பு குழையச் சொன்னோம், அலட்சியமாக நடத்தினான்; கோரிக்கைகளை விடுத்தோம், கொடுமைகளை ஏவினான்; இனி மாமன்றம் மன்னனுக்கு மனுச்சமர்ப்பிக்காது, மக்களின் தீர்ப்பை வழங்கும். நிலை இதுவாகிவிட்டது.

மாமன்றம், மக்கள் இல்லம், தேவாலயம், சிறைக்கூடம், பாசறை, வணிகர்கோட்டம், கப்பல் தட்டுகள், எங்கும், கண்டனம்!

"யோசனை கூறும்படி மன்னன் நம்மை அழைத்திருக்கிறான்.

மக்களோ, தங்களுக்கு உற்ற குறைகளை எடுத்துரைக்கும் கட்டளையிட்டு நம்மை மாமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர்,

அச்சம் கூடாது! நாம் நமது கடமையைச் செய்யத் தவறக் கூடாது" என்று ஒருவர் கூறினார்.

"பெர்ஷியாவிலே ஒரு காலத்திலே உருட்டி மிரட்டி ஆண்டுவந்த மன்னன் ஒருவன் இருந்துவந்தான். அவன் காலத்தில் நீதிபதிகள் நடுங்கும் குரலில் பேசினர். சட்டம் இருக்கத்தான் செய்கிறது, ஆனால் மன்னன் தன் விருப்பம்போல நடந்துகொள்ளலாம் — அவர் உரிமை அது என்றனர். நாம் அத்தகைய கேடான பேச்சுப் பேசலாகாது. நடுங்கும் குரல் கொள்ளக்கூடாது, நாம், நாட்டின் உறுப்பினர், மக்களின் உரிமைக் குரல்!" என்று எடுத்துரைத்தார் வேறோர் உறுப்பினர்.

"உயிர், உடைமை, உரிமை, யாவும் பறிபோகிறது. வாளா இருப்பவன் மனிதனாகான்!" என்று இடித்துரைத்தார் இன்னொருவர்.

"அரசியல் முறைக்கு ஒரு திட்டம், சட்டம்! உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு ஒழுங்கு முறை! நீதி வழங்கும் இடங்கள்! இவைகளெல்லாம் இருக்கின்றன நமக்கு! ஏன், இவைகள்? இவைகளால் இம்மி அளவேனும் பலன் உண்டா? மன்னன்தான் இவைகளை எல்லாம் கேலிக் கூத்தாக்குகிறானே. நமக்கேன் இந்த காகிதக் கேடயங்கள்!" என்று கேலியைக் கொட்டினார் மற்றோர் உறுப்பினர்.

ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு பேசுபவர்போல, உரிமை முழக்கமிட்டனர். ஒன்று, இரண்டு, மூன்று என்று, பட்ட கஷ்டங்களைக் கணக்கெடுத்தனர். எல்லோரும், இருவரைச் சுட்டிக்காட்டி, அகற்றப்பட வேண்டிய விரோதிகள் என்றனர்; அவர்கள் குறிப்பிட்டது, லாட், ஸ்டாராபோர்டு, எனும் இருவரையும்.

மன்னன் அரண்மனையில்தான் இருக்கிறான்! அவனைச் சுற்றிப் பிரபுக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். கோலும் முடியும், கொலுமண்டப உடையும் அழகு குன்றாமல்தான் உள்ளன. இங்கே மாமன்றம், அரசனின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பணியில் ஈடுபடுகிறது. 'கூடு' என்றால் கூடி, 'கலை' என்றால் கலைந்துபோக வேண்டியதல்லவா, மாமன்றத்தின் கடமை, மன்னன் தத்துவத்தின்படி. இந்த முறை கூடிய மாமன்றம், வேலையை முடிக்காமல் கலைந்துபோவதில்லை என்ற சூள் உரைத்துவிட்டது.

ரோம் நாட்டிலே ஒரு விழாவாம்! ஆண்டுக்கோர் நாள் அடிமைகள் அனைவரும் கூடுவராம். மனதிலே குமுறிக் கொண்டிருக்கும் குறைகளை எல்லாம் எடுத்துப் பேசுவராம். தங்களைக் கொடுமைசெய்யும் 'எஜமானர்களை'க் கண்டித்துப் பேசுவராம்! எஜமானர்கள், அதற்கு உரிமை தந்தனராம்! ஒரு நாள்! கூடிப் பேசுவர்! மறுநாள், பழையபடி! அடிமைகளாவர்!! குறைகளுக்குப் பரிகாரம் கிட்டாது!—இதுபோல, மாமன்றம் எப்போதாவது கூடுவது, இதயத்தில் உள்ளதை எடுத்துரைப்பது, பின்னர் கலைவது என்பது இனி முறையாக இருத்தலாகாது; கூடினோம், கொடுமை களைவோம்! என்று முழக்கமிட்டார், ஓர் உறுப்பினர்,

அரண்மனைக்குச் செய்திசென்றது, மக்கள், மாமன்ற நடவடிக்கைகளை மகிழ்ச்சியுடன் கவனித்துக்கொண்டிருந்தனர். எல்லா வேலைகளையும் மறந்தனர், மாமன்ற அலுவலைக் கவனிப்பதே, வேலையாகிவிட்டது மக்களுக்கு. திரள் திரளாகக் கூட்டம், மாமன்ற வாயலில்! பிடிவாதம் பேசும் பிரபுவைக் கண்டால், ஆர்ப்பரிப்பர்! மக்கள் சார்பாகப் பேசுபவரைக் கண்டால் வாழ்க என்று முழக்கமிடுவர்! அமுல்செய்யும் அதிகாரிகள், வெளியே உலவ அச்சம் கொண்டனர்! அரண்மனைக்குள்ளேயே, அச்சம் படையெடுத்தது. போர்க்கள வாடை நாட்டிலே வீசலாயிற்று! நடைமுறைத் திட்டங்கள் தீட்டக்கூடியதல்ல இந்த மாமன்றம், மன்னராட்சி முறையே தேவைதானா, என்ற பெரும் பிரச்னைக்கு முடிவு கூறவே வந்திருக்கிறது, என்று மக்கள் கூறினர்.

கொடுமைகளைத் தாங்கிக்கொண்ட காலம் மலைஏறிவிட்டது; இப்போது தியாகத் தழும்புகளைத் தடவிப் பார்த்தபடி, தருக்கருக்குத் தக்க தண்டனைதரும் நாள் பிறந்துவிட்டது! எங்கே அந்தக் கொடியவர்கள்? ஏன் இனியும் அவர்களை விட்டுவைப்பது? என்று முழக்கம் கிளம்பிவிட்டது. மாமன்றத்தின் வலுவு முழுவதும் தெரியும் நாள் அது.

மக்கள் துரோகி ஸ்டாபோர்டு தண்டிக்கப்பட வேண்டும்!—என்று பிம், கூறினார், "இழுத்து வருக" என்று உடன் முழக்கமிட்டனர் மாமன்றத்தார்! மன்னன்? அரண்மனையில்! ஆனால் ஏதும் செய்ய இயலாத நிலை! நாட்டு மக்களை அடக்குமுறைக்கு ஆளாக்கி, மக்களின் வரிப்பணத்தை பாழாக்கி, மன்னனை ஆகாவழி புகுத்தி அவதியை உண்டாக்கிய, லாட், ஸ்டாபோர்டு, இருவரும், சிறையில் தள்ளப்பட வேண்டும்! என்று தாக்கீது பிறந்தது. அதனைத் தடுக்கும் சக்தி, மன்னனுக்கு இல்லை! தடுக்க முயன்றிருந்தால், அரண்மனை தரைமட்டமாகி விட்டிருக்கும், மக்கள் அவ்வளவுக்குத் துணிந்திருந்தனர்.

இரு கொடுமையாளர்களும், இந்தப் புயல் நீண்ட காலம் அடிக்காது, அடங்கிவிடும், என்று எண்ணியபடி சிறை சென்றனர், அடங்கக்கூடியதல்ல; இந்தப் புயல்! அடக்கும் ஆற்றல் எவருக்கும் இல்லை!!

(தொடரும்)

# காட்டுத் தீயும்! வீட்டு விளக்கும்!!

**பரபரப்பூட்டும்** நிகழ்ச்சி நடைபெறும் சூழ்நிலையை உருவாக்கும் நேரத்திலேயே, பெரியார் அவர்கள், தமது திருச்சிப் பேருரையில், ஜனநாயகம், சர்வாதிகாரம், ஆகியவைபற்றிய தமது கருத்துரையை வழங்கி இருக்கிறார்.

செயலில் ஈடுபட அழைப்புவிடும் சமயத்தில், இவ்விதம் சிந்தனையைக் கிளறும் வாய்ப்பையும் அவர் தந்தது, பிரச்சினையைப் புரிந்து கொள்ள மிகவும் பயன்படுகிறது.

பெரியார், ஜனநாயகத்திலே எனக்கு நம்பிக்கை கிடையாது—ஜனநாயகம் என்றவார்த்தை, கேட்பதற்கு அழகாக இருக்குமேதவிர காரியத்துக்கு அது ஒத்துவராது—என்று கூறுகிறார்.

கூறுவது மட்டுமல்ல, என்னுடைய கழகத்தில் உள்ளவர்கள் ஜனநாயகம் பேசிக்கொண்டிருப்பவர்கள் அல்ல. அதனால்தான் அவர்கள், அய்யா சொல்லட்டும் என்ன செய்யவேண்டுமென்று, அதன்படி நாங்கள் நடந்து கொள்ளுகிறோம் என்று கூறிவிட்டார்கள். நான் சொன்ன கொடி கொளுத்தும் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று எடுத்துரைத்தார்.

நான் சர்வாதிகாரிதான்—எனக்கு அதிலேதான் நம்பிக்கை இருக்கிறது—அதுதான் காரியமாற்றப் பயன்படும் என்பதாகவும் கூறினார்.

இந்த அவருடைய சர்வாதிகாரம், அன்பினால் கட்டுண்டு கிடப்பவர்கள் தாமாகப் பார்த்து அவருக்குத் தருவது என்பது பற்றியும் அகமகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

சர்வாதிகாரம் சுவையுள்ளதாகத் தெரிவது சகஜம் — சர்வாதிகாரம் செலுத்துபவர்களால்!

அந்த முறையிலே பெரியார் சர்வாதிகாரத்தை ஆதரித்துப் பேசுகிறார்.

சர்வாதிகாரம்தான் சிறந்த முறை, அதனாலேதான் ஏதேனும் காரியம் சாதிக்க முடியும், எனவே நான் இனி சர்வாதிகார ஆட்சிதான் நடத்தப்போகிறேன் என்று நேரு பண்டிதரோ, காமராஜரோ கூறினால், பெரியார் ஏற்றுக் கொள்ளமாட்டார்; சர்வாதிகாரத்தால் விளையும் கொடுமைகள் பற்றி விளக்கமளிப்பதுடன் சர்வாதிகாரங்கள் நிலைத்து நிற்பதில்லை என்பதற்கான சான்றுகளையும் அளிப்பார்.

**ஆகவே அவர் ஆதரிப்பது சர்வாதிகாரம் எனும் தத்துவத்தை அல்ல, அந்த நிலை தனக்குத் தரப்பட்டிருப்பதைத்தான் ஆதரிக்கிறார்.**

திராவிடர் கழகம் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது; இதிலேதான் ஏற்றம் இருப்பதாகக் கூறிப் பெருமையும் அடைகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், அப்படிப்பட்டதல்ல.

இதிலே யாரும் சர்வாதிகாரம் செலுத்துவதுமில்லை — செலுத்தவும் முடியாது—செலுத்தும் நிலையில் இருப்பதாகவும் கூற இயலாது.

பெரியார் கூறியிருப்பதுபோல, ஒரு அமைப்பிலே சர்வாதிகாரியாகத் திகழ ஒரு சில தலைவர்களுக்குமட்டுமே முடியும்—பெரியார் கூறியிருக்கிறபடி, அப்படிப்பட்ட தலைவர்களும் இனி அதிகமாக ஏற்பட முடியாது.

அதன் பொருள் இரண்டு. ஒன்று சர்வாதிகாரம் வகிக்கும் ஆற்றல் படைத்த தலைவர்கள் இனி இருக்கமாட்டார்கள் என்பது—மற்றொன்று ஜனநாயகத்தில் ஆர்வமும் நம்பிக்கையும் வெகுவாகப் பரவிக்கொண்டு வருதனால், இனி எந்த அமைப்பிலும், சர்வாதிகாரம் அமுல் நடத்த யாரும் இடமளிக்கமாட்டார்கள் என்பதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில், சர்வாதிகாரதத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களுமில்லை; சர்வாதிகாரியாகத் திகழத்தக்க தகுதி எனக்கு உண்டு என்று கூறிடும் தலைவரும் இல்லை; இருக்க யாரும் அனுமதிக்கவும் மாட்டார்கள்.

எனவே, எது மேலானது, சர்வாதிகாரமா? ஜனநாயகமா? என்ற பிரச்சினைக்கே நமது கழகத்தில் இடம் இல்லை.

ஜனநாயகம்தான் ஒன்றுபடுத்தி வைக்கிறதே தவிர, சர்வாதிகாரமல்ல.

அந்த ஜனநாயகம் செம்மையாக நடைபெறும் வழி வகை என்ன, என்று கண்டறிந்து பணியாற்றுவதுதான் நமது பிரச்சினையே தவிர, செலுத்துபவருக்குச் செந்தேனாகவும், ஆட்படுபவருக்குக் கருந்தேளாகவும் கருதப்படத்தக்க சர்வாதிகாரத்தை நாமும் கையாளலாமா என்பதல்ல.

எனவேதான், எதைச் செய்ய முற்பட்டாலும், நமது பொதுக்குழுவைப் பொதுச் செயலாளர் கூட்டிக் கலந்துபேச வேண்டும் என்ற நிலை இருக்கிறது.

சர்வாதிகார முறையினால் பெரும் பலன் காண்பதாகப்

பெரியார் கூறுகிறார்— இருக்கக் கூடும். ஜனநாயக முறையினால் பெரும் பலன் நாம் கண்டிருக்கிறோம் என்பது நமது கழகத் தோழர்கள் பெற்றுள்ள பாடமாகும்.

ஒருவருக்கொருவர் தகுதியிலும் திறமையிலும், ஆற்றலிலும் அனுபவத்திலும், அதிகமான அளவுக்கு வித்தியாசமில்லாதவர்கள் நாம். இதனால், நாம் ஜனநாயக முறையின்படிமட்டுமே காரியமாற்றக்கடமைப்பட்டிருக்கிறோம். அதன் மூலமாகத்தான் பலன் கண்டிருக்கிறோம்

திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயகத்தின் மூலமாகமட்டுமே வலுவும் பொலிவும் பெறுகிறது.

இதனால்தான், மற்றக் கட்சிகள் நடாத்தும் கிளர்ச்சிகளில் கலந்துகொள்வதா வேண்டாமா, அவர்கள் கிளர்ச்சிகளுக்காக வகுக்கும் முறை நமக்கு உடன்பாடானதா இல்லையா என்பன போன்ற பிரச்சினைகளை, திராவிட முன்னேற்றக் கழகம், பொதுக்குழு கூட்டி மட்டுமே கலந்துபேசி முடிவெடுக்க முடியும்.

இதை மனதில் வைத்துத்தான், நாடகத் தடைச் சட்டம் வருகிறதே திராவிடர் கழகம் கிளர்ச்சி நடத்தினால் கலந்துகொள்வீர்களா, ஆகஸ்ட் போரில் திராவிடர் கழகம் ஈடுபடப்போகிறதே நீங்கள் சேருவீர்களா, என்று கேட்டபோது கிளர்ச்சி நடத்தும் கட்சிகள் எங்கள் பொதுச் செயலாளரை அழைத்துப் பேசட்டும், அவர் பிறகு பொதுக்குழுவைக் கூட்டுவார், அக்குழு முடிவெடுக்கும் என்று சொல்லுகிறோம்.

**இதிலே இருப்பது 'மதிப்பு' பற்றிய பிரச்சினை அல்ல!**

**அமைப்பின் தன்மை அவ்விதம் இருக்கிறது.**

முறைப்படி அழைப்பு பெறாமலும், முன்கூட்டி கலந்து பேசிடாமலும், பொதுக்குழுவைக் கூட்டிக் கருத்தறியாமலும், மிக முக்கியமான கிளர்ச்சியைப் பெரியார் துவக்கிவிட்டார், எனவே நாமெல்லாம் முழு மூச்சாக அதிலே ஈடுபடவேண்டியதுதான் என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் கூறிட முடியாது—சர்வாதிகாரமாகும் அது—அதனை இங்கு விரும்புவாரும் இல்லை, தாங்கிக்கொள்ளவும் இயலாது.

பெரியார், ஜனநாயகம்—சர்வாதிகாரம் என்பது பற்றி திருச்சியில் பேசி இருப்பதன் கருத்தை ஆராயும்போது, நாம் ஏன் திராவிடர் கழகம் நடத்தும் கிளர்ச்சியில் ஈடுபடவில்லை என்பதன் பொருள் நன்றாக விளங்கும்.

கிளர்ச்சி துவக்குபவர்—நடத்துபவர் — சர்வாதிகாரம்தான் சாலச் சிறந்தது, அதன்படிதான் நான் பணியாற்றுகிறேன் என்று கூறுபவர். நாம், எங்களிடையில் சர்வாதிகாரம் எழாது, நாங்கள் ஜனநாயகத்திலேதான் நம்பிக்கை வைத்திருக்கிறோம், என்று கூறி அதன்படியே காரியமாற்றுபவர்கள்.

தன் கட்சியே சர்வாதிகார முறையை ஏற்றுக்கொள்ளவேண்டும், ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று கூறும் பெரியார், திராவிட முன்னேற்றக்கழகத்தினிடமா, ஜனநாயக முறைப்படி நடந்துகொள்ள இசைவார்! எதிர்பார்த்து ஏமாற்றமடைகிறோம்.

எனவே, ஒரு கழகம் ஜனநாயக முறையில் நம்பிக்கையும், மற்றோர் கழகம் சர்வாதிகார முறையில் நம்பிக்கையும்கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலையில், எப்படி இரு கழகங்களும் கூடிப் பணியாற்றி ஒரு கிளர்ச்சியில் ஈடுபட முடியும்!

இந்த அடிப்படை உண்மை, நாட்டவருக்கு விளங்கும் வகையில் பெரியாரின் திருச்சி பேச்சு அமைந்திருந்தது காண நாம் அகமகிழ்கிறோம்.

மற்ற எவ்வளவோ பிரச்சினைகளிலே கருத்து வேற்றுமைகளைக் கொட்டிக் காட்டுபவர்களெல்லாங்கூட நால்வர் மாநாடு குறித்து மகிழ்ச்சியுடன் ஒத்த கருத்துரை வழங்கினர். உலகினைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டிருந்த யுத்த பீதியை இந்த மாநாடு வெகுவாகக் குறைத்துவிட்டது என்று எல்லா நாடுகளிலும் எல்லா அரசியல் கட்சிகளும் கூறுகின்றன.

அப்படிப்பட்ட நால்வர் மாநாடு கூடவேண்டுமென்று முதன் முதலாக யோசனை கூறியவர் **சர்ச்சில்.**

அவர் அந்த மாநாட்டில் இல்லை.

குறைந்தது ஐம்பதாண்டு உலக வரலாறு அவருக்கு விரல் நுனியில் இருக்கிறது.

களம் வகுத்திடவும் அதிலே வெற்றி கண்டிடவும், முன்னேறித் தாக்கவும், பதுங்கிப் பாதுகாத்துக் கொள்ளவுமான போர்முறை அறிந்தவர்.

ஐரோப்பிய பகுதியிலும் அமெரிக்காவிலும், உள்ள தலைவர்களின் மனப்போக்கினை நன்கு உணர்ந்தவர்.

அத்தகைய அறிவாற்றல் மிக்கவர், அனுபவமிக்கவர், உலகப் பெரும்போர் மூளாதிருக்கும் ஒப்புயர்வற்ற பணியிலே வழிவகை காண்பதற்கெனக் கூட்டப்பட்ட நால்வர் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை; காரணம், அவர் இப்போது பிரிட்டனில் முதலமைச்சராக இல்லை.

பிரிட்டனில் முதலமைச்சராக உள்ள **ஈடன்**, நால்வர் மாநாட்டில் கலந்துகொண்டார்.

சர்ச்சிலுக்கு அல்லவா இத்தகைய அரும் பெரும் மாநாட்டிலே வீற்றிருக்கும் 'அந்தஸ்து' உண்டு, என்று பொறுப்புள்ள எந்த பிரிட்டிஷானும் பேசவில்லை.

நால்வர் மாநாடு கூடி நற்பணியாற்றும் வரையிலாவது சர்ச்சில், பிரதமராக இருக்கட்டும் என்று யாரும் கூறிடவில்லை.

உலகம் மிகக் கூர்ந்து கவனித்திடும் மாநாட்டிலே நாமல்லவா இருக்கவேண்டும் என்று சர்ச்சிலும் கூறினாரில்லை.

ஈடன் தன் பணியினைத் திறம்பட ஆற்றுவார் — என்றார் சர்ச்சில்.

எனக்கோ வயதாகிவிட்டது—நாட்டாட்சிக்குத் தேவையான உழைப்பினை அளித்திட என் பருவம் இடம்தராது—ஆயினுமென்ன ஈடன் இருக்கிறார், நடத்திச் செல்லும் திறன் படைத்தவர், என்று கனிவுடன் கூறினார், மிகக் கண்டிப்பான போர்வழி என்றும், பிடித்த பிடியை விடமாட்டாரென்றும், அதிகார மோகம் கொண்டவரென்றும், பிற்போக்காளரென்றும், எதேச்சாதிகாரி என்றும், பலராலும் கண்டிக்கப்பட்டு வந்த முதுகிழவர்.

ஜனநாயகம் என்பதன் இலட்சணத்தை, இந்தச் சம்பவத்திலே காண்கிறோம்.

**என்னாலன்றி வேறு யாரால் ஆகும்!**

**நான் யாரை நம்பி இந்தக் காரியத்தை ஒப்படைப்பேன்!!**

**மற்றவர்கள், பொறுப்பற்றவர்கள், அரசியலைப் பிழைப்பு ஆக்கிக்கொண்டவர்கள்!!!**

சர்ச்சில் இவ்விதம் பேசவில்லை.

சர்ச்சில்தான் இந்தச் சூழ்நிலையில், அழிவு வராமல் கலத்தைச் செலுத்தக்கூடியவர், வேறு எவர் அந்தக் காரியத்தைச் செய்ய முற்பட்டாலும், அழிவுதான் நேரிடும் என்று கன்சர்வேடிவ் கட்சி கண்களைக் கசக்கிக்கொள்ளவில்லை.

சர்ச்சில் இல்லையா? அப்படியானால், நால்வர் மாநாடு என்ன கதியாவது? என்று பிரிட்டன் கேட்கவில்லை.

சர்ச்சில் இல்லாததால் நால்வர் மாநாட்டின்மீது உலகம் தன் கவனத்தைச் செலுத்தாமலில்லை.

சர்ச்சில் பெரியவர்; செயற்கரிய செய்பவர்—உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை—ஆனால், அவரை விட்டால், வேறு ஒருவர் இல்லை என்று நிலைமை இருத்தலாகாது—நிலைமை அவ்விதம் இல்லை—ஏனெனில், **சர்ச்சில் ஆற்றிய அரும்பணிகளிலே மிக முக்கியமான பணி, ஒரு ஈடனைத் தயாரித்தது!**

"இறையே! தங்களுக்குப் பிறகு நாட்டு நிலைமை என்ன ஆகும்?" —என்று கேட்டபோது, பிரன்சு மன்னனொருவன் சொன்னானாம், **"எனக்குப் பிறகா! பிரளயம்!"** என்று.

சர்ச்சில், எனக்குப் பிறகு ஈடன் என்றுமட்டுமல்ல, என் வயோதிகம் என்னைத் தடுக்கிறது, எனவே என்போல இதோ ஈடன்! என்று கூறினார்!

இதுதான் ஜனநாயகம்!!

கடந்த போரின்போது, பயங்கரமான சூழ்நிலை இருந்தநேரத்தில், சர்ச்சில், அமெரிக்கா செல்ல வேண்டி நேரிட்டது. அப்போது, அவர், பிரிட்டிஷ் குடும்பத்தாரிடம், எனக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டுவிடுமானால், அஞ்சற்க! ஈடன், என் பணியினைத் தொடர்ந்து நடத்துவார் என்று கூறிச் சென்றார்.

ஜனநாயகமும் இதுதான்—பண்பும் இதிலேதான் இருக்கிறது—உலகம் உய்யும் வழியும் இதிலேதான் இருக்கிறது!

சர்வாதிகாரம் சக்திவாய்ந்ததாக இருக்கலாம்!

நெறித்த புருவம், உரத்த குரல், மிகுந்த ஆற்றல், ஓயாத உழைப்பு, எதிர்ப்பினைக் கருக்கிடும் திறம், இவைமூலம் சர்வாதிகாரம் நீண்ட காலமும் நிலைத்திருக்கலாம்—ஆனால், சர்வாதிகாரம், பெற்றெடுக்கும் பிள்ளைகள், குழப்பம், கலாம், பயங்கரம் என்பனபோன்றவைகளாக இருக்கமுடியுமேயன்றி, சர்ச்சிலால் பயிற்சி செய்விக்கப்பட்ட ஈடன்; ஈடன் பெற்றுள்ள அறிவாற்றலுக்கு ஈடான அளவு பெற்றுத் திகழும் பட்லர்; என்று ஒரு 'தொடர்' இருக்கமுடியாது.

கைகட்டி வாய் பொத்தி நின்று குற்றேவல் புரிவோருக்குக் கனிவு கிடைக்கும்.

இச்சகம் பேசிடுவோருக்கு எலும்புத் துண்டுகள் கிடைக்கும்.

இது சரியல்லவே! இது முறையாகுமோ? என்று கேட்போருக்கு, இடி கிடைக்கும்.

சர்வாதிகாரம் இந்த இலட்சணங்கள் பொருந்தியது — ஆனால், சர்வாதிகாரத்தின்மூலம், தொடர்ந்து கிடைக்கக்கூடியது என்ன? அதுதான் முக்கியமான பிரச்சினை.

ஒரு கட்சியிலும் சரி, நாட்டிலும் சரி, ஒரோர் சமயம், அந்தக் கட்சியின் வளர்ச்சி, நாட்டின் நிலைமை ஆகியவற்றுக்குத் தக்கபடி ஒருவருக்குச் சர்வாதிகாரம் செய்யும் வாய்ப்புக் கிடைக்கலாம்—ஆனால் அதனைத் தத்துவமாக்கிக்கொள்ள எவரும் விரும்பமாட்டார்கள்.

**ஆலிவர் கிராம்வெல்** இங்கிலாந்து நாட்டிலே சர்வாதிகாரம் செலுத்தினார்—அந்தச் சூழ்நிலை அதற்கு இடம் தந்தது — எனினும், அவருடைய நெஞ்சமே சர்வாதிகாரம் என்ற பெயர்கொள்ள இடம் தரவில்லை, பாதுகாப்பாளர் என்றே தன்னை அழைத்துக்கொண்டார்!

பிறகோ? பிரிட்டன் மீண்டும், பிடரியில் ஒட்டிக்கொண்டிருந்த பனித் துளிகளை உதறிக்கொண்டு எழும் சிங்கமாகிக் காட்சி தந்தது.

சர்வாதிகார முறைக்கு விளைநிலம் — இப்போது மிக மிகக் குறைந்த அளவுதான் — அதுவும் வேகவேகமாக குறைந்துகொண்டு வருகிறது!!

எனவேதான், சர்வாதிகாரம் எனும் தத்துவத்தை ஏற்றுக்கொள்ள மிகப் பிற்போக்கான நாடு கூட விரும்புவதில்லை.

ஜனநாயகத்திலேயே யாராவது ஒருவர், எப்போதாவது, 'ஒருவிதமாக' நடந்துகொண்டால், இந்தச் **சர்வாதிகாரம் செல்லாது** என்று கூறிடக் கேட்கிறோம்.

சர்வாதிகாரம், நிலைக்கக்கூடியது மல்ல, நிம்மதி அளிக்கத்தக்கது மல்ல, என்பதைச் சர்வாதிகாரிகளே உணர்ந்திருக்கிறார்கள்.

தங்களாலேமட்டும்தான் முடியும் என்ற எண்ணமும், தங்களைத் தவிர வேறு யாருக்கும் தன்னலமற்ற பணியாற்ற முடியாது என்ற கருத்தும் மேலோங்கித்தான் சிலர் சர்வாதிகாரியாகி இருக்கிறார்கள்.

இந்த மனப்பான்மை அவர்களுக்கு வெகு விரைவில் சுபாவமாகி விடுகிறது!

பிறகோ, எந்தக் காரியத்தைச் செய்வதற்கும், எந்தக் கருத்தை வெளியிடுவதற்கும், எந்தத் திட்டம் தீட்டுவதற்கும் எதை நிறைவேற்றுவதற்கும் அவர்கள், வேறு யாரையும் நம்பமுடியாத நிலை பெற்று, மனதிலே பெரும் பாரத்தைச் சுமந்துகொண்டு தத்தளிக்கிறார்கள்.

நாட்டுக்கு நட்டம் இதனால் மட்டும் அல்ல!

அந்தத் தலைவர்கள் இத்தகைய முறையிலே நடந்துகொள்வதால், எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் திறனோ, பயிற்சியோ, ஆற்றலோ அனுபவமோ பெறுவதற்கு எவரும் எழுவதில்லை!

காட்டு ரோஜாக்களாக, காட்டாறுகளாக, கருகிய மொட்டுகளாக — பலருடைய இயற்கையான அறிவாற்றல் ஆகிவிடுகிறது —சர்வாதிகாரம் இந்த வகையில் நாட்டிலே பெருத்ததோர் ஆற்றல் பஞ்சத்தை உண்டாக்கி வைக்கிறது.

அன்பு, பாசம், பற்று, கட்டுப்பாடு, ஆகியவைகளை அடியோடு இழந்துவிட வேண்டும் என்று கூறுவதாகத் திரித்துப் பொருள்

கொள்வார் இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் இதைக் கூறுகிறோம்.

பெருவெள்ளத்துக்கும் கட்டுக்கு அடங்கி, காட்சிக்கினியதாய், பயனளிப்பதாய் பாய்ந்தோடும் ஆற்றினுக்கும்,

காட்டுத் தீயினுக்கும் வீட்டின் விளக்குக்கும்,

வேங்கைகளைச் சாய்த்திடும் வேழத்தின் ஆற்றலுக்கும், தீஞ்சுவைப் பாலினை அளித்திடும் ஆவினுக்கும்,

இவைகளுக்கு உள்ள வேற்றுமைபற்றி எண்ணிப் பார்த்திடுக! பிறகு சர்வாதிகாரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையே உள்ள வேற்றுமையினை உணர்ந்திடுவது எளிதாகும்!!

கேட்போர் உள்ளத்தைத் தொடக்கூடிய பிரச்சினை கிளம்பியதும், அதனைவிடாமல் மக்களிடம் எடுத்துக் கூறி, அந்தப் பணியாற்றுகையிலே, எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல், கஷ்டநஷ்ட மேற்றுக் கொண்டு, சில பல ஆண்டுகள் பணியாற்றும் ஆற்றல் மிக்க தலைவரிடம், அந்தக் கொள்கையிலே நம்பிக்கை வைப்பவர்கள், நிச்சயமாகச் சொக்கிவிடவும், அவருக்கு 'அடிமை' ஆகவும், அன்புத் தொண்டு செய்யவும், அவரைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றவும், அவர் கிறிடும் கோட்டினைத் தாண்டாமலிருக்கவும், அவருக்காக அரும் பொருள் எதனையும், ஆவி உட்பட, அர்ப்பணிக்கவும், எண்ணற்றவர்கள் எழத்தான்செய்வர்.

அவர்கள், அந்தத் தலைவரிடம் காட்டும் நம்பிக்கை அபாரம்.

எத்தகைய சாகசத்துக்கும் பலியாக மாட்டார்கள். சபலத்துக்கு இடமளிக்க மாட்டார்கள்.

எவருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்த மாட்டார்கள் எவ்விதமான சூழ்நிலையையும் சமாளித்துக்கொள்வார்கள்.

வீட்டிலே அவர்களுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியைவிட, தலைவரின் விடுதியிலே அவர்கள் பேரானந்தம் அடைவர்.

பெற்றோருக்குச் செய்யும் பணிவிடையைக் காட்டிலும், தலைவருக்கு ஊழியம் செய்வதிலே உவகை காட்டுவர்,

அந்தக் கட்டம் சுலபத்திலே ஏற்படுவதில்லை.

அந்தக் கட்டத்தை எல்லாத் தலைவர்களாலும் காண முடிவதுமில்லை.

ஆனால் அந்தக் கட்டம் பிறந்ததும், இரண்டு வழிகள் எதிரே தோன்றும்—எவருக்கும்.

ஒன்று, இத்துணை பற்றும் பரிவும், தொண்டு உள்ளமும் அஞ்சாமையும், காட்டும் 'தோழர்களை' அறிவாற்றல் உள்ளவர்களாக்கி, அவர்களைச் சிந்திக்கவும், சிந்தனையைச் செம்மைப்படுத்திக் கொள்ளவும், தன்னைப்போல அறிவாற்றல் பெறவும், தான் துவக்கிய பணியினைத் தொடர்ந்து நடாத்திச் செல்லும் திறனுள்ளவர்களாகவும் ஆக்குவது, அதற்கான பயிற்சியும் பொறுப்பும், வாய்ப்பும், உரிமையும் அளிப்பது.

பொறுப்புணர்ச்சியூட்டும் பயிற்சி அளிப்பது தொல்லை நிரம்பியது!

ஆனால், ஒரு தலைவர், இந்தப் பயிற்சி அளித்து, ஒரு 'பரம்பரை'யை ஏற்படுத்திக்கொண்டால் அவருடைய கொள்கை வெற்றி பெறுவது மட்டுமல்ல, சிறந்த கொள்கையைக் கண்டறியும் சிந்தனா சக்தியும், கண்டறிந்த கொள்கையினை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்திடும் நல்லார்வத்தையும், கொள்கையினை வெற்றிபெறச் செய்யும் ஆற்றலையும் பெற்ற ஓர் உன்னதமான குழாம் அமைகிறது.

அந்தக் குழாம் அமைந்தால், ஜனநாயகம் தவழ்கிறது.

தன்னிடம் பற்றும் பரிவும் காட்டுவோரிடம், பொறுப்புகளை ஒப்புவிக்கவும், பயிற்சி அளிக்கவும், பக்குவப்படுத்தவும், பண்படுத்தவும், நேரத்தையும் நினைப்பையும், ஆற்றலையும் அறிவையும் செலவிட விரும்பாமல், தன்னிடம் அன்பால், கொள்கைப் பற்றினால் கட்டுண்டு கிடப்பவர்களை, காட்டும் இடம் நோக்கிப் பாயவும், நீட்டும் ஓலையில் கையொப்பமிடவும் மட்டுமே பயன்படுத்திக்கொண்டிருந்தால், அங்கு ஜனநாயகம் எழாது, சர்வாதிகாரம் தான் இருக்கும்.

**சர்வாதிகாரம், ஒரு காரியத்தைச் சாதிக்கும் கருவி என்று கூறுகிறார்கள், அதன் ஆதரவாளர்கள்.**

**ஜனநாயகம், காரியங்களைச் சாதிப்பதற்கான கருவிகளைத் தயாரிக்கப் பயன்படும் உலைக்கூடம்!**

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காண்கிறோம் தம்பி. காமராஜரின் அறிக்கை!!

*

யூனியன் பார்லிமெண்டு சபாநாயகர், மாவலங்கர் இந்தி கட்டாயத்தின் மூலம் நுழைக்கப்படாது என்று சேலத்தில் மே 31-ல் பேசி இருக்கிறார். (மெயில் ஜூன் 1)

*

இந்தியைத் திணிக்கவில்லை—திணிக்கமாட்டோம். இந்தி படிக்கும்படி தூண்டுகிறோமே தவிர, கட்டாயப்படுத்தவில்லை என்பதாக யூனியன் தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் மே 28ல் திருச்சூரில் தெரிவித்திருக்கிறார்.

(மே 29—மெயில்)

*

உத்யோகத்தை நாடுபவர்களுக்குத் தொல்லை வராதபடிதான் இந்தியைப் பக்குவமாகப் பரப்புவோம், என்று யூனியன் டிப்டி போலீஸ் மந்திரி தத்தார் தெரிவிப்பு, மே 24, மெயிலில் காணக் கிடக்கிறது.

*

இந்தியை மக்கள்மீது கட்டாயப்படுத்தித் திணிக்கும் பிரச்சினைக்கே இடமில்லை என்று மே 11ல், பூரியில், யூனியன் மந்திரி கேஸ்கர் தெரிவித்திருப்பது, இந்துவில் வெளிவந்திருக்கிறது.

*

இந்தியைத் திணிக்கமாட்டோம் கட்டாயப்படுத்த மாட்டோம்—தமிழ் நாட்டு மக்கள் தாமாக இந்தியில் பயிற்சி பெற்று வருகிறவரையில் காத்துக்கொண்டிருப்பேன் — என்பதாக, யூனியன் மந்திரி கேஸ்கர் மதுரையில் ஜூலை 6ல் பேசியிருக்கிறார். இந்தத் தெரிவிப்பு மெயிலில் வெளியாகி இருக்கிறது.

*

தென் இந்தியாமீது இந்தியைத் திணிப்பது சர்க்கார் நோக்கமல்ல என்று குடிஅரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத், ஹைதராபாத்தில், ஜூலையில்தான் பேசியிருக்கிறார்.

நேரு பண்டிதர், பல தடவைகளில் இந்தி வெறியர்களின் போக்கைக் கண்டித்திருக்கிறார்.

எந்த மொழியும் சொந்த மொழிக்கு ஈடாகாது என்று பல முறை பண்டிதர் பேசி இருக்கிறார்,

வடநாட்டிலேயே, பல தலைவர்கள்—வங்கம்—மராட்டியம்—கலிங்கம்—பாஞ்சாலம்—ஆகிய பகுதியினர், இந்தி வெறியைக் கண்டித்துப் பேசினர்.

மொழி அல்லது கல்வி சம்பந்தமான விழாக்கள் நடைபெறும்போதெல்லாம், இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று டில்லி தர்பாரினரே பேசுகிறார்கள்; இனியும் பேசப்போகிறார்கள்.

**தாலமுத்து நடராசன் உயிர் குடித்ததோடு, தமிழகத்தைப் பொறுத்தவரையில், கட்டாய இந்தி மடிந்தது என்று திட்டவட்டமாகக்கொள்ளலாம்.**

மத்ய சர்க்காரின் நிலையைப் பல தடவைகளில் இது சம்பந்தமாகத் தெளிவுபடுத்திவிட்டனர் — 'ராஜ்ய சர்க்காருக்கு யுக்தம்போல்' நடந்துகொள்ளும் உரிமை தரப்பட்டிருக்கிறது.

எனவேதான், ஆந்திரத்தில், ராஜ்ய சர்க்கார் இந்தியைக் கட்டாய பாடமாக்கிவிட முடிந்தது; சென்னை இராஜ்யத்தில், இந்தி கட்டாய பாடம் ஏன் ஆக்கவில்லை என்று ஆந்திராவைச் சுட்டிக் காட்டி, மத்ய சர்க்கார் கேட்கவில்லை.

**'கட்டாய இந்தி' மத்யசர்க்காரின் திட்டமாகவும் இன்று இல்லை; சென்னை ராஜ்யமும் அதைத் திட்டமாகக்கொள்ளவில்லை—அதுபோன்ற நோக்கமோ முயற்சியோ இல்லை.**

**இந்த நிலையில், இந்தியைக் கட்டாய பாடமாக்குவதில்லை, திணிப்பதில்லை, என்று வாக்குறுதி ஏன் நமக்கு?**

எனவே, இப்போது கொடி கொளுத்துவதாகக் கூறி ஓர் போர்ச் சூழ்நிலையை உருவாக்கி, அதனைக் காட்டி, காமராஜர் அறிக்கை என்ற 'வரம்' பெற்றதாகக் கருதிப் பூரிப்படைய நமக்கு மனம் இடந்தரவில்லை—அது பெரியாருக்குப் பெருமைதருவது என்று கூறி, அவருடைய பெருமையைக் குறைத்திடவும் விருப்பம் எழவில்லை—அந்தக் காரியத்தை அவருடைய இன்றைய நண்பர்கள்' ஒத்துழைப்பாளர்கள், திறம்படச் செய்துவருகிறார்கள்—அந்தச் சிரமத்துக்காகப் பணமும் பெறுகிறார்கள்!

அந்த நண்பர்கள், பெரியாரிடம், தி.மு.க. பற்றி, மிக மிகத் தவறான கணக்குகளைத் தருகிறார்கள்—உண்மையை மறைக்கிறார்கள்.

அவர்களின் கணக்குப்படி, திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு அரை டஜன் சிறுவர்கள் கொண்டது!!

இராயபுரத்தில் எங்கோ ஒரு இடத்திலே கிடப்பது!

அது, கரைந்து, கலைந்து, குலைந்து நலிந்து, மெலிந்து, மாண்டுபோகும் என்று 'நல்வாக்கு' கொடுத்தவண்ணம் இருக்கிறார்கள்—ஆறு ஆண்டுகளாக!!

அதிலிருந்து, அவர் விலகினார், இவர் விலகப்போகிறார் — என்று கரடிவிட்டு, பெரியாரைக் களிப்படையச் செய்கிறார்கள்.

அதுகளுக்குச் செல்வாக்கே இல்லை! என்கிறீர்களே, மாநாடு நடத்துகிறார்கள், ஆயிரம் பத்தாயிரம் என்று மிச்சம் காட்டுகிறார்களே, எப்படி முடிகிறது? என்று பெரியார் கேட்கிறார். அத்துடன் விடுகிறாரா, நீங்களும் பிரமாதமாக என்னிடம் நம்பிக்கை ஊட்டிவிட்டு, மாநாடு போடுகிறீர்கள், மிச்சம் என்ன என்றால், சொச்சம் தர வேண்டி இருக்கிறது என்கிறீர்கள், பந்தல்காரனுக்கும் பாண்டுவாத்யக்காரனுக்கும்!—என்று கேட்கிறார். என்ன செய்வார்கள், என்ன சொல்லி தப்பித்துக் கொள்வார்கள்.

"அது.......அவர்கள் சினிமாக்காரரை, நாடகக்காரரைக் காட்டிப் பணம் திரட்டுகிறார்கள்.........அதனாலேதான்........என்று இழுத்துப் பேசுகிறார்கள்—அவர் அவர்களைக் கோபத்துடன் பார்த்துவிட்டுக் கணைத்துக் காட்டுகிறார்—பொருள் உண்டு அதற்கு, நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் குதிரைமீத மர்ந்தல்லவா, மாநாடுகளின் ஊர்வலம் நடக்கிறது—அது அவருக்குத் தெரியாதா — சினிமாக்காரர் கலந்துகொள்வதால், தி. மு. க. ஜொலிக்கிறது என்றால், சினிமாக்காரர்களே கண்டு பாராட்டும் நடிகவேள் இருக்கும் இடத்துக்கு அல்லவா, ஆதரவு பெருகி வழிய வேண்டும்!

இதுபோலவே, ஒவ்வோர் உண்மையும் அவரிடமிருந்து மறைக்கப்படுகிறது,

ஜனவரியோடு ஒழிந்துவிடுவார்கள்! மார்ச் வந்தால் மாண்டுபோவார்கள். ஜூனில் ஜனனி பிறந்துவிடும்—ஜூலையில் ஒழிந்துபோவார்கள் — ஆகஸ்ட்டு அவர்களை அழித்தேபோடும்—என்று, சூனியக்காரன், கோழி முட்டைக்கு மஞ்சள் குங்குமம் தடவி, எதையோ முணுமுணுத்துவிட்டு, இதைக் கொண்டுபோய் மாட்டுக் கொட்டிலில் மூன்றடி ஆழக்குழியில் புதைத்துவிட்டு வந்துவிடுகிறேன், மூன்று மணி நேரத்தில் அவன் வாயிலும் மூக்கிலும் இரத்தம் கக்கி இறந்துபடுவான் பாருங்கள் என்று கூறிவிட்டு, கூலியை வாங்கி முடிபோட்டுக்கொண்டு, சாராயத்தை வெறி ஏறும் அளவுக்குக் குடித்துவிட்டுப் போகும் கதைபோல, இதோ ஏழு கட்டுரை, மூன்று பிரசங்கம் இவைகளாலேயே ஒழித்துக் கட்டிவிடுகிறேன் பாரும் என்று பெரியாரிடம் பேசி, அவரை நம்பச் சொல்கிறார்கள்.

ஒவ்வோர் ஊரிலும் உள்ள முக்யஸ்தர்களின் பெயரைக் கூறி, "அவர் நமது கழகம்—தங்களிடம் நிரம்பப் பக்தி — வெளிப்படையாக வரமாட்டார், ஆனால் மனதுக்குள்ளே, நிரம்ப கொள்கைப்பற்று—நெற்றியிலே குங்குமப் பொட்டு இருக்கும், ஆனால், குடி அரசு படிக்காவிட்டால் தூக்கம்வராது—" என்று பெரியாரிடம் புளுகிவைக்கிறார்கள்.

அந்த ஊரில், எவ்வளவு பேர் இருக்கிறார்கள் — அந்தப் பயல்களுக்கு? — என்று பெரியார் கேட்கிறார், உடனே, அவர்களுக்கு ஒரு ஆள்கூடக் கிடையாது— என்று கூறிவைக்கிறார்கள்.

வடநாட்டுக் கடைகளை மறியல் செய்வோம்—அவர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள், உடனே, வடநாட்டுக் கடைக்காரனை விட்டுவிட்டு, அவர்கள் மீது பாய்வோம், ஒழித்துக்கட்டிவிடலாம், 9கட்டுரை போதும் என்று கூறுகிறார்கள், 999 கட்டுரைகள் திட்டுகிறார்கள், ஒழிவதாகக் காணோம்—ஓய்ந்தால் தேய்ந்தோம் என்ற அச்சத்தில் மேலும் சில கட்டுரைகள் திட்டி, அவர்களை ஒழிக்கப் பயன்படாவிட்டாலும், நமக்கு எழுதும் பழக்கம் வளரட்டும் என்ற அளவில் திருப்தி அடைந்து இவ்வளவு எழுதும் எனக்கு இன்னும் ஓர் இருபது என்று பெரியாரிடம் சென்று இளிக்கிறார்கள்.

இவைகளைப் பெரியார் அறியாமலில்லை!

ஆனால் என்ன செய்வது? ஆலையில்லா ஊரில் இலுப்பைப் பூ, சர்க்கரை என்பார்களே! அதுதான்! தெரிகிறதா, தம்பி!!

அன்பன்,

**அண்ணாதுரை.**

## துங்கு திட்டம்

"அணைக்கத் தயார், அமைதியை விரும்பி, அமளியை நிறுத்திக் கொண்டு, அராஜகத்தைக் கைவிட்டு சட்டபூர்வமான அரசியல் நடவடிக்கைகளுக்குத் திரும்பினால்! இல்லையானால், ஊரில் உள்ளவர்களை ஒன்று திரட்டி ஒழித்துக்கட்டுவேன்"—என்று மலாய் நாட்டின் முதல்வராக அமர்ந்துள்ள துங்கு அப்துர்ரஹிமான் கம்யூனிஸ்டுகள் குறித்து ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளை ஒழித்திட பயங்கரமான அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு பிரிட்டிஷார், வேட்டையாடினர். காடுகளிலே ஒளிந்துகொண்டு கயூனிஸ்டுகளும் 'இரத்தத்துக்கு இரத்தம்' என்ற முறையில் போரிட்டு வந்தனர். ஏராளமான பொருட்செலவு—சொத்து நாசம்—பல உயிர்கள் வீணாயின—மனம் உருகும் வகையில் பலரைத் தூக்கிலுமிட்டனர்.

துங்கு பதவி ஏற்று, கம்யூனிஸ்டு கிளர்ச்சிக்காரருக்கு, ஒரு வாய்ப்பு அளிக்கிறார்.

கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளரை ஒரு இரகசிய இடத்தில் சந்தித்து இது சம்பந்தமாகப் பேசத் தயாராக இருப்பதாகவும், கம்யூனிஸ்டுகளில் சீனர்களாக உள்ளவர்கள் சீனா போய்விட விரும்பினால் அனுப்பி வைக்கப்படுவர் என்றும், மலேயாவிலேயே தங்கி இருக்க விரும்புவோர், சட்டத்தை மதித்து வாழ்வதாக வாக்களித்து, சட்ட பூர்வமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட இசைந்தால், கம்யூனிஸ்டு கட்சி மீது உள்ள தடையை நீக்கிவிடுவதாகவும், துங்கு தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்டுகளின் பலம், வெகுவாக ஒடுக்கப்பட்டுவிட்டது; இனி அவர்களால் பயங்கரச் செயல்களில் ஈடுபட முடியாது; ஆகையால் அவர்கள் சரண் அடைவார்கள் என்று எதேச்சாதிகாரிகள் கூறுகின்றனர்.

ஏகாதிபத்யம் தன் பிடியை ஓரளவுக்குத் தளர்த்திக்கொண்டிருக்கிறது, துங்கு மந்திரிசபை அமைக்கப்பட்டிருப்பது, ஜனநாயகத்தின் துவக்க கட்டம்போல இருக்கிறது, ஆகையால், இனி காடுகளிலிருந்துகொண்டு கடும் போரிடத் தேவையில்லை, நாடு திரும்பி, மக்களிடம் 'வாக்குகளை'ப் பெற்று ஆட்சியில் பங்கும் பெறலாம் என்று கம்யூனிஸ்டுகள் கருதி, சமரசம் செய்துகொள்ள ஆவலாக இருப்பதாகவும் தெரிகிறது.

கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளர் சின்பெங் என்பவருடன் துங்குரஹிமான் சந்தித்துப் பேசுவதுபற்றி 'சிங்கப்பூர் ஸ்டாண்டார்டு' முக்கியத்துவம் கொடுத்து எழுதியிருக்கிறது.

துங்குவின் இந்த நடவடிக்கை, நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கும் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர். மலேயாவின் அமைதியைக் குலைத்து வந்த பலாத்கார நடவடிக்கைகள் ஒழிந்து, ஜனநாயக நடவடிக்கைகள் உதயமாவதற்கு வழிகாண விரும்பும் துங்கு, உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியவரே.

# திரட்டு

## குங்குமப்பூ!

வெள்ளைக்காரன் காலத்திலே, மலையாளம் அனாதைப் பிள்ளையாக நடத்தப்பட்டது; இப்போதும் அதே கதிதான்!

சென்னை சர்க்காரோ, மலையாள நாட்டு அபிவிருத்தியில் துளியும் அக்கறை காட்டுவதில்லை.

50 இலட்சம் மக்கள் கொண்ட பகுதி; சட்டசபையில் 30 உறுப்பினர்கள் உள்ளனர்; இருந்தும், சென்னை மந்திரி சபையில் ஒரு மலையாளிக்கு இடம் இல்லை.

இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, மலையாளத்தில் சில பெரிய தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும்.

5000 கோடி செலவிடப்போகிறார்களாம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு—இந்தப் பணம் கிடைக்குமா என்பதும் சந்தேகம்தான்.

மலையாளிகள், தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். தங்கள் நாடு புறக்கணிக்கப்படுவதை கவனிக்கவில்லை.

மலையாளத்துக்கு இந்த நிலைமை இருப்பதற்கு இதுதான் காரணம்.

—இவ்வளவும் பேசியிருக்கிறார், காலஞ்சென்ற படேலுக்கு வலதுகரம் போலிருந்து, இந்திய சர்க்காரின், சமஸ்தான இலாகாவில் பணியாற்றி, இப்போது பதவியிலிருந்து விலகி ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் வி. பி. மேனன்.

பாரதம் — ஏக இந்தியா — வடக்கு தெற்கு என்று பேதம் பேசாதே—எங்கே தொழில் வளர்ந்தால் என்ன—என்று இங்கே தமிழ்த் தலைவர்கள் தேசியம் பேசுகிறார்கள்; அதுதான் தங்கள் பரந்த அறிவுக்கும் விரிந்த மனப்பான்மைக்கும் ஏற்றது என்று கூறுகிறார்கள். இதோ வி. பி. மேனன் டில்லியில் பெரிய பதவியில் இருந்து, தலைநரைத்தவர்; ஆசை நரைத்ததா பாருங்கள். சுதேச சமஸ்தானங்களை இந்தியாவில் இணைக்கும் திட்டத்தை நடத்திக் காட்டியவர், என்றாலும் அவர் உள்ளத்திலே தாயகப் பாசம் பட்டுப் போகவில்லை.

மலையாள நாட்டு வளம்; மலையாள நாட்டு முன்னேற்றம்; மலையாள மந்திரி!—என்று உரிமையுடன் பேசுகிறார்.

இத்தனைக்கும், வி.பி. மேனன் கே. பி. எஸ். மேனன், பணிக்கர், நாயர், கிருஷ்ண மேனன், என்று, பட்டியல் இருக்கிறது; பெரிய பதவிகளில் மலையாளிகள் இருக்கிறார்கள்.

சென்னை சர்க்கார் இலாகாவில் முதன்மை அதிகாரியே ஒரு மலையாளிதான்.

என்றாலும், எங்கள் நாடு! எங்கள் வளம்! எங்கள் மந்திரி! — என்று வழியே போகிறவர் அல்ல, பெரிய பதவியில் வாழ்ந்தவர் பேசுகிறார்; தன் மக்களுக்கு உணர்ச்சி ஊட்டுகிறார், உரிமைக் குரலை எழுப்புகிறார். எங்கே நமது சர். ராமசாமி, லட்சுமணசாமிகளைப் பேசச் சொல்லுங்கள்—இதெல்லாம் குறுகிய மனப்பான்மை என்று உபதேசம் செய்கிறார்கள். வி. பி. மேனன் அவர்கள் சொன்னபடி, சென்னை சர்க்கார், மலையாள நாட்டைப் புறக்கணிக்கிறது என்று யாரும் கூறமாட்டார்கள். என்றாலும், அவருக்கு தன் நாட்டைப் பற்றிப் பேசவேண்டும் என்ற உள்ள உரம் இருக்கிறது. அது பாராட்டுதலுக்குரியதுதானே! இங்கே தமிழனுக்குக் கூழுக்கு உப்பு இல்லை என்றால், கண்ணை மூடிக்கொண்டு, கடவுள் மீது பாரத்தைப்போட்டுவிட்டுகுடித்து விடுங்கள், மீறி ஏதேனும் கிளர்ச்சி செய்தால் சுட்டுவிடச் சொல்லுவேன் என்று மிரட்டத்தான் தலைவர்கள் இருக்கிறார்கள்! அதோ வி. பி. மேனன் பாலுக்குச் சீனி போட்டால் மட்டும் போதுமா, குங்குமப்பூ வேண்டாமா என்று கேட்கிறார். பன்னெடுங்காலமாக, நிர்வாக அதிகாரியாக இருந்தவருக்குக் கூட இந்த எண்ணம் ஊற்றெடுக்கிறது, இங்கே தமிழ்த் தலைவர்களுக்கு, மக்களிடம் பழகி அவர்களால் மந்திரிகளாக்கப்பட்டவர்களுக்கு 'தேசியம்'தான் பிடிக்கிறது—தாயகம் தெரியவில்லை, கண்ணுக்கு!

மேனன் பேச்சாவது இந்தமேதாவிகளுக்குச் சிறிதளவு நாட்டுப்பற்று தரவேண்டும்.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.